# இலக்கு
வாராந்த மின்னிதழ்

இதழ் : 41 • 01.09.2019

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ilakku2009@gmail.com


# உயிரைப் பணயம் வைத்து போராடும் மக்களுக்கு உதவுங்கள்



சர்வதேசத்திடம் அனைத்துலக ஈழத்தமிழர் உரிமை மையம் கோரிக்கை



## காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் சிறீலங்காவை பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்துக!

ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு ஐ.நாவுக்குக் கோரிக்கை

## காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சனையில் இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தல்






## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியைப்பெற ஒரேவழி சர்வதேச குற்றவியல் நீதிமன்றே

தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் இடித்துரைப்பு

# காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் தாயகம், புலம்பெயர் தேசங்களில் இடம்பெற்ற போராட்டங்களின் தொகுப்பு

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதியைப்பெற ஒரேவழி சர்வதேச குற்றவியல் நீதிமன்றே

## தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் இடித்துரைப்பு

காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதுள்ளிட்ட அனைத்து விடயங்களையும் அறிந்து நீதியைப்பெறுவதற்கு ஒரேவழி அவ்விடயத்தினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வதேயாகும் என தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் விடுத்துள்ள அறிக்கையில் இடித்துரைத்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது...தமிழர் தாயகத்தில் போரின் இறுதியிலும் அசாதாரண சூழலிலும் ஆயிரக்கணக்கானவர்கள் காணாமலாக் கப்பட்டுள்ளனர். குறிப்பாக போரின் இறுதியில் மாத்திரம் குழந்தைகள், இளைஞர்கள், யுவதிகள் என்று படையினரிடத்தில் சரணடைந்தும், விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட பின்னரும் காணாமலாக்கப்பட்டுள்ளனர். சர்வதேச மன்னிப்புச்சபை ஐ.நா.செயற்பாட்டாளர்களின் ஆய்வுகளை அடிப்படையாக் கொண்டு 80ஆயிரம் பேர் வரையிலான தமிழர்கள் காணாமலாக்கப்பட்டுள்ளதாக கூறுகின்றது.

போர் நிறைவுக்கு வந்து ஒருதசாப்தமாகியுள்ள நிலையிலும் இதுவரையில் அந்த உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறியமுடியாது உள்ளது. சிங்கள பேரினவாத ஆட்சியாளர்கள் தமது ஆட்சியை தக்கவைப்பதற்காகவும், சர்வதேசத்தின் அழுத்தங்களை நீர்த்துப்போகச் செய்வதற்காகவும் உதாலகம ஆணைக்குழு முதல் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு என ஆணைக்குழுக்களை நியமித்து காலத்தினை கடத்தினார்கள். ஆனால் இந்தக்குழுக்களில் தாயகத்தினைச்சேர்ந்த 20ஆயிரத்திற்கும் அதிகமான உறவுகள் தமது உயிர்களை துச்சமென மதித்து சாட்சியங்களை வழங்கினார்கள். மேலும் பலர் சாட்சியங்களாக இருக்கின்றபோதும் உயிரச்சம் காரணமாக அமைதியாகவே ஆணைக்குழுவின் முன்னிலையில் தோன்றாது இருந்துவிட்டார்கள். 2015இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்தவர்களும் கடந்த ஆட்சியாளர்களுக்கெல்லாம் ஒருபடி மேலேசென்று காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றி அலுவலகத்தினை ஸ்தாபிப்பதற்கான சட்டமூலத்தினை நிறைவேற்றி அதன் கட்டமைப்புக்களை ஒவ்வொரு ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகள் நடைபெறுகின்றபோது கண்துடைப்புக்காக திறப்புவிழாக்களை செய்து வருகின்றன.




உறவுகளைத் தொலைத்துவிட்டு வீதியில் நின்று 900நாட்களைக் கடந்தும் போராடிக் கொண்டிருக்கும் சொந்தங்கள் தொடர்பில் எவ்விதமான கரிசனை—யினை ஆட்சியாளரும், நாடாளுமன்ற பிரசன்னங்களில் உள்ள எந்த அரசியல் தலைமைகளும் கொண்டிருக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் மீதான பாராமுகம் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. தமது அன்புக்குரியவர்கள் இன்றுவருவார்கள், நாளை வருவார்கள், அங்கிருக்கின்றார்கள், இங்கிருக்கின்றார்கள் என்று அங்கலாய்த்து அலைந்துதோய்ந்த சொந்தகளில் 40பேர் வரையிலானவர்கள் நிராசையுடன் இப்பூவுலகை விட்டுப்




பிரிந்து சென்றுவிட்டனர். எஞ்சியிருப்பவர்கள் தமது சொந்தங்களுக்கு என்ன நேர்ந்தது என்று தெரியாது அன்றாடம் திண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறு உணர்வு ரீதியான இந்த விடயங்களை புரிந்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு சிங்கள,பௌத்த பேரினவாதத்திற்குள் பொதிந்திருக்கும் எந்தவொரு தென்னிலங்கை தலைமைகளும் தயாராக இல்லை. மாறாக, யார் யார் எல்லாம் தாயகவாழ் உறவுகளை காணாமலாக்கச் செய்வதற்கு காரணகர்த்தாக்களாக இருந்தார்களோ அவர்களுக்கு பதவிகளையும் பட்டங்களையும், இன்னும் ஏன் அரச அரியாசனங்களையும் வழங்குவதற்குவதற்கான முஸ்தீபுகளே இடம்பெற்று வருகின்றன. சிறீலங்காவினுள் தொலைத்த உறவுகளை அங்கே தான் தேடவேண்டும் என்பது காலத்தின் கட்டாயம் என்றாலும் உள்நாட்டு சூழலும் பேரினவாத தலைமைகளும், அதற்கு துணைபோகும் தமிழ்த் தரப்புக்களும் இடமளிப்பதாக இல்லை. சாட்சியங்களை அச்சுறுத்தியும், சாட்சிகளின் வீச்சினை குறைக்கின்ற செயற்பாடுகளிலும்தான் அவை அதிகம் கவனத்தினைச் செலுத்துகின்றன.

தொடர்ச்சி 3ம் பக்கம்

# காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் அம்பலமான தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் இரட்டை வேடம்



காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் சனாதிபதியுடன் சிரிப்பு மழையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர்

சர்வதேச காணமாலாக்கப்பட்ட தினத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரட்டை வேடம் அம்மபலமாகியுள்ளது. சர்வதேச காணாமலாக்கப்பட்ட தினத்தில் தமிழர் தாயகத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளால் பாரிய கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதில் கிழக்கில் நடைபெற்ற போராட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எந்தவொரு மக்கள் பிரதி—நிதிகளும் பங்கேற்றிருக்கவில்லை.

மறுபக்கத்தில் வடக்கின் பிரதான போராட்டம் ஓமந்தையில் முன்னெடுக்கப்பட்டபோது காணாமல்போனவர்கள் பற்றி விடயத்தினை இழுத்தடிப்புச் செய்வதற்காக அமைக்கப் படுவதற்கான அலுவலகத்திற்குரிய சட்ட மூலத்திற்கு வாக்களித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனும், அடுத்த நாடாளுன்ற பதவிக்கான கனவில் இருக்கும் முன்னாள் வடமாகாண அமைச்சர் வைத்தியர் சத்தியலிங்கமும் மட்டுமே கலந்து கொண்டனர்.

போரின் கொடுமைகளை நேரில் பார்த்த, அனுபவித்த சாந்தி சிறிஸ்கந்த ராஜாவோ, வைத்தியர் சிவமோகனோ கலந்து கொள்ளவில்லை. அதேநேரம் தமிழரசுக் கட்சியை என்றும் விமர்ச்சித்துக்கொண்டிருக்கும் செல்வம் அடைக்கலநாதனும், சித்தார்த்தனும் கூட இந்த பேரணியில் பங்கேற்றிருக்கவில்லை. இதேவேளை, குறித்த தினமன்று சனாதிபதி மைத்திரி தனது அரசியல் நாடகத்தினை அரங்கேற்றுவதற்கான அபிவிருத்தி திட்டங்களை திறப்பதற்காக யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார்.

அவருடைய நிகழ்வுகளில் விடுதலை வீச்சை உணர்ந்தவர் என்று கூறும் மாவை. சேனாதிராஜா, சர்வதேசத்தில் நீதிபெறுவதற்காக போராடுவதாக கூறும் சுமந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தார்கள். ஆனால் அந்த நிகழ்வுகளில் சனாதிபதி முன்னிலையில் உரையாற்றுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தபோதும் ஒரு நிமிடமேனும் சிந்தித்து ஆகக்குறைந்தது காணாமலாக்கப்பட்ட சர்வதேச தினத்தினையாவது கருத்திற்கொண்டு ஒரு சொல்லைக்கூட வெளியிட்டிருக்கவில்லை.

காணாமலாக்கப்பட்ட உறவினரின போராட்டத்தில் திட்டமிட்டு பங்கேற்காமை, ஒருசில உறுப்பினர்கள் திட்டமிட்டு பங்கேற்க வைக்கப்பட்டமை, சனாதிபதியின் முன் கேள்விகேட்பதற்கான வாய்ப்பிருந்தும் கூட மௌனம் காத்தது மட்டுமன்றி அவருடைய அபிவிருத்தி திட்டங்களுக்காக நன்றி தெரி—வித்தமை என அனைத்துச் செயற்பாடுகளுமே வாக்குவங்கியை மையப்படுத்தி மக்களின் உணர்வுகளுடன் விளையாடும் அரசியல் நாடகம் என்பது அப்பட்டமாக வெளிப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



கண்ணீர் வெள்ளத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்


# காணாமல் ஆக்கப்படுதல் - இலங்கைக்கு நீண்ட வரலாறு!

## ஐ.நா.வின் விசேட அறிக்கை

வலிந்து காணாமலாக்கப்படும் சம்பவங்களைப் பொறுத்தவரை இலங்கை மிக நீண்ட வரலாற்றைக் கொண்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு நேற்று ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. வலிந்து காணாமலாக்கப்படும் சம்பவங்களைப் பொறுத்தவரை இலங்கை மிக நீண்ட வரலாற்றைக் கொண்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு நேற்று ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் காணாமல்போனோர் அலுவலகம் மாபெரும் பொறுப்பு ஒன்றைக் கொண்டிருக்கிறது. அவ்வலுவலகத்தின் சவால்மிக்க ஆணையை நிறைவேற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து அரச நிறுவனங்களினதும் ஒத்துழைப்பு அவசியமாகும். நீண்டகால நோக்கிலான நிலைபேறான முயற்சிகளின் ஊடாகவே துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கானோருக்கான தீர்வையும், மீட்சியையும் அளிக்க முடியும் என்றும் ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டியிருக்கிறது.

# மக்களின் பாதுகாப்புக்கே கோத்தா களமிறங்கினாராம்-மகிந்த



மக்களுக்கான பாதுகாப்பை மீண்டும் உறுதிப்படுத்தவே, எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் பலமான வேட்பாளருடன் களமிறங்கியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் மகளிருக்கான மாநாடு நேற்று சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் இவ்வாறு கூறினார். மகிந்த மேலும் கூறியதாவது, “2015ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் நான் தோல்வியடைந்து, மெதமுலனவிற்கு சென்றபோது, பெண்கள்தான் அதிகளவாக கவலையடைந்தார்கள்.

எமது வீட்டுக்கு வந்தவர்களிலும் பெண்கள்தான் அதிகளவில் இருந்தார்கள். நாம் இந்நாட்டின் அனைவர் தொடர்பிலும் அன்று சிந்தித்து செயற்பட்டமையால்தான் இத்தனை அன்பு கிடைத்துள்ளது. அவ்வாறான ஒரு அரசாங்கமும் நாம்தான். மக்களின் பாதுகாப்பு எல்லாம் எமது காலத்தில் உறுதிசெய்யப்பட்டிருந்தது. எனினும், ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் மீண்டும் மக்களுக்கு அச்சமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. யாரும் அச்சப்படாதீர்கள். நாம் என்றும் மக்களுடன் மக்களாக இருக்கிறோம். இந்த அரசாங்கம் மக்களுக்காக எதை செய்தது? இராணுவத்தினருக்கு எதிரான செயற்பாடுகளைத்தான் முன்னெடுத்தது. இவ்வாறான சுமைகளில் இருந்து மக்களை மீட்டெடுக்கத்தான் நாம் மீண்டும் கள மிறங்கியுள்ளோம். மக்களுக்கு நாம் என்றும் பொய்யான வாக்குறுதிகளை வழங்க மாட்டோம். பொய்யான வாக்குறுதிகளை வழங்கினால் அது அந்த அரசாங்கத்துக்கு இறுதி காலம் தான். இந்த அரசாங்கம் பெண்களுக்கு எதை செய்தது? ஒன்றுமில்லை” எனக் குறிப்பிட்டார்.

### கோத்தபாய ராஜபக்சவின் ஆட்சியில் காணாமல்போனோரின் உறவுகளுக்கு நிச்சயம் தீர்வாம் - வாசுதேவ புலம்பல்

யுத்தத்தில் காணாமல் போனோரது உறவுகளை ஏமாற்றும் செயற்பாடுகளையே அரசாங்கம் முன்னெடுப்பதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, காணாமல்போனோர் அலுவலகத்தில் செயற்பாடுகளின் மீது மக்களுக்கு எவ்வித நம்பிக்கையும் கிடையாது என்றும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் நிச்சயம் ஆட்சி மாற்றம் இடம் பெறும். பாதிக்கப்பட்ட மக்களை ஒருபோதும் போலியான வாக்குறுதிகளினால் ஏமாற்ற மாட்டோம். உண்மைகள் எடுத்துரைக்கப்படும். அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள் உறுதியாக செயற்படுத்தப்படும் என்றார்.

2ம் பக்கத் தொடர்ச்சி ஆகவே தொலைத்த உறவுகளை மீட்பதற்கு இருக்கின்ற ஒரேவழி சர்வதேச தலையீடுகளும், அழுத்தங்களுமே ஆகும். ஆனால் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் கடந்த தடவையும் சிறீலங்கா அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கியமை உறவுகளைத் தொலைத்த நெஞ்சங்களை வஞ்சிப்பதாக அமைந்து விட்டது. எனவே மீண்டும், மீண்டும் சிறீலங்கா அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்குவதை சர்வதேச தரப்புக்கள் நிறுத்தி உடனடியாக குற்றங்களை இழைத்தவர்களை குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தி உறவுகளை காணாமலாக்கிய சூத்திரதாரிகளுக்கு தண்டனையையும் நீதிவேண்டி அலையும் உறவுகளுக்கு நீதியையும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றுள்ளது.

# ஜெனீவாவில் பேசினால் நீதி கிடைக்குமா?

காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் கடந்த வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டபோது பல விடயங்களை அவதானிக்க முடிந்தது. தாயகத்திலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் தமிழ் மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றபோது தமிழகத்திலும் ஈழத்தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கொளத்தூர் தா.செ.மணி ஒருங்கிணைப்பில் ஐ.நாவிடம் கோரிக்கை மனு கையளிக்கப்பட்டதோடு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் இதுகுறித்து பத்திரிகையாளர் சந்திப்பும் நடைபெற்றது. இதன் மூலம் இந்தப் பிரச்சினை மீண்டும் பேசு பொருளாகியிருக்கின்றது. அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவில்லை என்பது சர்வதேசத்துக்கு மீண்டும் சொல்லப்பட்டிருக்கின்றது. சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களும் இவ்விடயத்தில் தமது அக்கறையை வெளிப்படுத்தியிருந்தன.

காணாமல் ஆக்கப்பட்டோர் செயலகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகம் இரகசியமாகத் திறந்துவைக்கப்பட்டது. மக்கள் போராட்டங்களை நடத்துவார்கள் என்ற அச்சத்தில் காலை புலர்வதற்கு முன்பாகவே அவசரமாக செயலகம் திறந்துவைக்கப்படும் நிலை. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துவெளியிட்ட செயலகத்தின் தலைவர் சாளிய பீரிஸ், தமது பரிந்துரைகளை அரசாங்கம் கணக்கிலேயே எடுப்பதில்லை என்பதை வெளிப்படுத்தினார். இவை அனைத்தும் இரண்டு விடயங்களைத் தெளிவாக்கியிருக்கின்றது.

ஒன்று — அரசாங்கம் பொறுப்புக் கூறப்போவதில்லை. இரண்டு — ஜெனீவாவில் எடுக்கப்படும் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வது போல சிறீலங்கா அரசாங்கம் காட்டிக்கொண்டாலும் எதனையும் செய்யப்போவதில்லை. "போர் வீரர்கள் எவரையும் காட்டிக்கொடுக்கப்போவதில்லை" என்பதுதான் சிறீலங்காவில் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் எடுக்கப்போகும் நிலைப்பாடு. "பொறுப்புக் கூறப்போவதில்லை" என்பதுதான் இதன் உண்மையான அர்த்தம்.

அதேவேளையில், ஜெனீவா தீர்மானங்களை ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் சிறீலங்கா அரசாங்கம் அதில் கூட நேர்மையாக இருப்பதில்லை. யாழ். பிராந்திய செயலகத்தைத் திறந்துவைத்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சாளிய பீரிஸ் முக்கியமான தகவல் ஒன்றைச் சொல்லியிருக்கின்றார். "போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியிருக்கும் படையினரை, இடை நிறுத்தி அவர்கள் மீதான விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என எமது இடைக்கால அறிக்கையில் நாம் கேட்டிருந்தோம். ஆனால், அரசாங்கம் அதனைச் செய்யவில்லை" என்பதுதான் அவர் தெரிவித்த முக்கியமான தகவல். போர்க் குற்றங்களில் சம்பந்தப்பட்டவர் என ஐ.நா.வினாலேயே அடையாளம் காணப்பட்ட சவேந்திர சில்வா சிறீலங்காவின் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட பின்னணியிலேயே இந்தத் தகவலை சாளிய பீரிஸ் வெளிப்படுத்தியிருக்கின்றார். இறுதிப்போரின்போது இடம்பெற்ற பெருமளவு இனப்படுகொலைகளுடன் அவர் சம்பந்தப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்திக் கொடூரமாகக் கொல்லப்பட்ட சம்பவத்தில் தொடர்புபட்டவர் என அடையாளம் காணப்பட்ட முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரணாகொடவுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கின்றது.

இவை அனைத்தும் மனித உரிமைகள் குறித்த சர்வதேசத்தின் அக்கறையை துச்சமாக அவமதிக்கும் செயற்பாடுகள். இதனை சிறீ லங்கா அரசு தொடர்ந்தும் செய்துகொண்டிருப்பதற்கு இந்தப் பிரச்சினை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குள் தொடர்ந்தும் இருப்பதும் ஒரு காரணம். இங்கு நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் வரவர வலுக்குறைந்துசெல்கின்றது. அவற்றை நீர்த்துப்போகச் செய்வதில் சிறீ லங்கா எப்போதுமே வெற்றிபெறுகின்றது. அந்தத் தீர்மானங்களைக் கூட நடைமுறைப்படுத்துவதில் சிறீ லங்கா அக்கறை காட்டுவதில்லை. "ஜெனீவாவில் பேசிப் பயனில்லை" என்பது கடந்த 10 வருடங்களில் எமக்கு உணர்த்தப்பட்டுவிட்டது. அதன் மூலம் சிறீ லங்காவைப் பணிய வைக்கவும் முடியாது! தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத்தரவும் முடியாது!!

இந்த இடத்தில்தான் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு செல்ல வேண்டும் எனக் குரலெழுப்பப்படுகின்றது. தற்போதுள்ள நிலையில், ஜெனீவாவை ஒரு பிரச்சார மேடையாகப் பயன்படுத்த முடியுமே தவிர, நீதியைப் பெற்றுக்கொள்வதற்கு குற்றவியல் நீதிமன்றத்துக்குத்தான் செல்லவேண்டியிருக்கும். இதில் கூட சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றது. ஆனால், ஜெனீவாவை மட்டுமே நம்பி காலத்தைக் கடத்துவதைவிட, மற்றொரு தளத்தை நோக்கியும் நாம் செல்ல வேண்டும் என்பதை சிறீலங்காவின் செயற்பாடுகள் உணர்த்துகின்றன. தமிழ்த் தலைமைகள், செயற்பாட்டாளர்கள், புத்திஜீவிகள் இவ்விடயம் குறித்து ஆரோக்கியமான உரையாடல்கள் மூலம், குற்றவியல் நீதிமன்றத்தை எப்படிப் பயன்படுத்த முடியும் என்பதையிட்டு சிந்திப்பது இன்றைய காலத்தின் அவசியம் என்பதை வலியுறுத்துகின்றோம்.

# சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் தமிழர் தாயகமெங்கும் நீதிவேண்டி கண்ணீருடன் திரண்ட மக்கள்

சர்வதேச காணாமலாக்கப்பட்டவர்கள் தினமான 30ஆம் திகதியன்று தமிழர் தாயகத்தில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளால் பாரிய கவனயீர்ப்பு போராட்டங்கள் உணர்வெளிச்சியுடன் முன்னெடுக்கப்பட்டன. வடக்கில் இறுதிப்போரின்போது உறவுகளை படை-யினரிடத்தில் கையளித்த ஓமந்தையில் பிரதான போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டம் வவுனியா- பன்றிக்கெய்தகுளம் பிள்ளையார் ஆலயத்தில் காலை 10.30 மணிக்கு தேங்காய் உடைத்து வணங்கிய பின்னர், ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகிய பேரணி ஓமந்தை இறம்பைக்குளம் வரை சென்றது. அதேவேளை, கிளிநொச்சியில் பகல் 12 மணியளவில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளால் கந்தசுவாமி ஆலயம் முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, காணாமலாக்கப்பட்டவர்களின் விடுதலையை வேண்டி அவர்களது உறவுகளால் தீச்சட்டி எடுக்கப்பட்டு, தேங்காய் உடைத்து வேண்டுதல் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து மன்னார் பிரசைகள் குழுவின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டமொன்று மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. போராட்டத்தின் பின் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், மன்னார் நகர சபை மண்டபம் வரை ஊர்வலமாகச் சென்று உணர்வெழுச்சிக் கூட்டமொன்றும் இடம்பெற்றது.

இதேவேளை காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதிகோரி கிழக்கில் மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த உறவுகளின் பங்கேற்புடன் கல்முனையில் பாரிய பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது. கல்முனை தரவைப் பிள்ளையார் ஆலயத்தில் பூசைகளுடன் ஆரம்பமான காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் பேரணி, கல்முனை பிரதான வீதியூடாக, கல்முனை வடக்கு பிரதேச செயலகம் வரை சென்றது. இதன்போது கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் செயலாளர் ரீ.ஜெ.அதிசயராஜ் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஏ.எல்.இஸ்ஸதீன் ஆகியோரிடம் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் கோரிக்கை மனுவைக் கையளித்தனர்.

## ஓமந்தை










## கல்முனை





## மன்னார் மற்றும் கிளிநொச்சி







# உயிரைப் பணயம் வைத்து போராடும் மக்களுக்கு உதவுங்கள்

## சர்வதேச சமூகத்திடம்

## அனைத்துலக ஈழத்தமிழர் உரிமை மையம் கோரிக்கை

உலகின் நீதிக்கும் அமைதிக்கும் உழைக்கும் உங்களிடம் இலங்கையில் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாது தங்கள் குடும்ப உறுப்பினர்களின் காணாமல்போன நிலை குறித்த உண்மையை அறியவும் நீதியைப் பெறவும் நட்டஈடுகளை அடையவும் போராடும் உலகால் மறக்கப்பட்ட மக்களாக உள்ள தமிழ்த்தாய்மாருக்கும் தந்தைமாருக்கும் கிட்டிய குடும்ப உறுப்பினர்களுக்கும் உங்களால் இயன்ற உதவியினை உடன் செய்யுமாறு அனைத்துலக வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினமாகிய இன்று (30) மனிதாயத்தின் பேரால் பணிவன்பாக வேண்டுகின்றோம் என அனைத்துலக ஈழத்தமிழர் உரிமை மையம் அனைத்துலக மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் பிரித்தானிய அரசு ஆகியவற்றிடம் கோரிக்கை விடுத்துள்ளது.



அனைத்துலக ஈழத்தமிழர் உரிமை மையத்தின் இந்த கோரிக்கை மனுவின் ஆங்கில வடிவமானது அனைத்துலக மன்னிப்புச் சபை, அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகம், ஐக்கிய நாடுகள் சபையின் ஐரோப்பிய ஒன்றிய அலுவலகம், பிரித்தானியா நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரித்தானியா பிரதமர் அலுவலகம் மற்றும் பிரித்தானியாவின் அங்கிலிக்கன் திருச்சபை ஆகியோரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சமர்ப்பிக்கப்பட்ட மனுவின் முழு வடிவம் வருமாறு

மறக்கப்பட்ட மக்களாக 900 நாட்களுக்கு மேலாக வலுக்கட்டாயமாக காணாமலாக்கப்பட்ட தங்கள் குடும்பத்தினருக்காகப் போராடும் தமிழ்த் தாய்மார்களுக்கு உதவ முன்வாருங்கள்

ஐக்கியநாடுகள் சபையின் 8வது அனைத்துலக வலுக்கட்டாயமாகக் காணாமலாக்கப்பட்டோர் தினமாகிய இன்று (30.08.2019) இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப்படைகளால் 11.07.1979 அன்று அன்றைய இலங்கை அரச அதிபர் ஜே.ஆர்.ஜயவர்த்தனா தனது மருமகனான பிரிகேடியர் வீரதுங்காவுக்கு கண்ட இடத்தில் சுடவும் சுட்ட உடலை விசாரணையின்றி அழிக்கவும் பயங்கரவாதச் சட்டத்தால் அனுமதி அளித்த மூன்றாம் நாள் 14.07.1979 அன்று யாழ்ப்பாணத்தில் ஆறுபேர் படைகளால் அழைத்துச் செல்லப் பட்டுக் காணமாலாக்கப்பட்டது முதல் கடந்த நாற்பது ஆண்டுகளாக அடுத்தடுத்துத் தொடர்ச்சியாக மனிதாயத்திற்கு எதிரான குற்றமாகிய வலுக்கட்டாயமாகக் காணாமாலாக்கப்படுதல் இலங்கைத் தமிழர்களின் அரசியல் பணிவை அச்சுறுத்தல் மூலம் பெறும் அரசின் தந்திரோபாயமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அன்று முதல் காணாமலாக்கப்படும் செயல்களால் வடக்கு கிழக்கின் பலபகுதிகளிலும் பாதிப்புக்குள்ளாகி வந்த ஈழத்தமிழர்கள் 2009 இல் முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு யுத்தத்தால் பல்லா—யிரக்கணக்கில் மேலும் பாதிப்புற்று இன்றுவரை உண்மைகள் வெளிப் படுத்தப்படுதலோ பொறுப்புக் கூறலோ அற்ற நிலையில் நீதி—விசாரணைகள் எதுவும் தகுந்த முறையில் நடைபெறாத சூழலில் தொடர்ந்து துன்புற்று வருவதை ஒன்றிய அரசியல் இனத்துவச் சிறுபான்மையினமாக வாழும் பிரிட்டிஸ் தமிழர்களாகிய நாங்கள் உங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகின்றோம்.

2015ம் ஆண்டில் இலங்கைக்குச் சென்ற ஐக்கியநாடுகள் சபையின் வலிந்து அல்லது விருப்புக்குமாறாக காணாமலாக்கப்படல் தொடர்பாக ஆராயச் சென்ற குழுவினர் "உண்மைகளையும் நீதியினையும் அடைவதற்கான பாதை நீண்டதாகவும் துன்பங்களைத் தருவதாகவும் இருப்பினும் அதுவே செல்வதற்கான ஒரே முறைமையான பாதை" எனக் கூறியும் இணக்கப்பாட்டுடனும், பொறுப்புக் கூறலுடனும், மனித உரிமையைப் பேணல் உடனும் பயணிப்பதற்காக, ஐக்கியநாடுகள் சபையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை நிறைவேற்றி, நான்கு அமைப்புக்களான. சிறப்பு வழக்குத் தொடுப்பவர் அலுலகத்துடன் கூடிய சிறப்பு நீதிமன்றம், உண்மை—நீதி—இணக்கப்பாடு— மீளவும் வன்முறைகள் நிகழாமை ஆகியவற்றுக்கான ஆணையகம், நட்டஈடு வழங்கு அலுவலகம், காணாமலாக் கப்பட்டவர் விடயங்களுக்கான அலுவலகம் என்பவற்றை நிறுவ வழிப்படுத்தியது" என 2017இல் அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆய்வறிக்கையான சிறிலங்காவின் காணாமல் போனவர்களுக்கான அலுவலகம்: ஒன்றன் பின் ஒன்றாக நீதி (The Sri Lankan office on Missing Persons : Justice in Tandem) என்பதை எழுதிய கொழும்பை மையமாகக் கொண்ட தெற்காசிய சட்ட ஆய்வு மையத்தின் ஆய்வாளரான முனைவர் இசபெல்லா லஸ்சி (Isabelle Lasse) தெரிவித்துள்ளார்.




ஆயினும் படையினர் குற்றவாளிகளாகக் காணப்பட்டால் அத்தகையவரை அடுத்து என்ன செய்வது என்பதற்குத் தெளிவான வழிகாட்டல்கள் இல்லாத காணாமல் போனவர்களுக்கான (Office on Missing Person) அலுவலகமாகவே இது அமைக்கப் படுவது மேம்பாடான அலுவலகமாகவும் குற்றவியல் நீதிச் செயற்பாட்டுகளுடன் தொடர் பற்றதாகவும் அமைக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்டினார். ஆயினும் சிறிலங்கா எந்த வழிகாட்டல்களுக்கும் தலைசாய்க்காது காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் திறக்கும் பாராளுமன்றத் தீர்மானத்தை ஏப்ரல் 2016இல் நிறைவேற்றி பங்குனி 2018இல் அலுவலகத்தைத் திறந்துள்ளது என்பதே சமகால வரலாறாக உள்ளது.

இதுவரை சிறீலங்கா அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்குப் பலத்த ஏமாற்றத்தை ஏற்படுத்துவதுடன் இந்தக் கால இடைவெளியில் உண்மைகள் வெளிவராதவாறு காணாமலாக் கப்பட்டவர்களுக்கான மரணச் சான்றிதழ்களைப் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரிடம் திணிப்பதே உள்நோக்காக இருப்பதாகப் பல ஆய்வாளர்களும் சுட்டிக் காட்டுகின்றனர். இந் நிலையில் வலுக் கட்டாயமாகக் காணாமலாக் கப்பட்டவர் களுக்கான அனைத்துலகத் தினமான இன்று தங்கள் குடும்பத்தினரை எண்ணி ஏங்கித் துடித்துச் சாகாமல் செத்துக் கொண்டிருக்கும் மறக்கப்பட்ட தமிழ்க் குடும்பங்களின் சார்பாக இந்த மனுவை உங்களுடைய பார்வைக்குப் பணிவன்புடன் சமர்ப்பிக்க விரும்புகின்றோம்.

1999 ம் ஆண்டிலேயே பிபிசியின் 28.03.1999ம் திகதியச் செய்தி ஐக்கியநாடுகள் சபையின் ஆய்வின் படி உலகிலே அதி கூடிய வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரை ஈராக்குக்கு அடுத்ததாக 2வது நிலையில் கொண்டிருந்த நாடாக சிறீலங்காவை குறிப்பிட்டது. இதில் 1980 முதல்12000 பேர் சிறீலங்காப்படைகளால் காவலில் வைக்கப்பட்ட நிலையில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த 27 ஆண்டுகளில் 55000பேர் கொன்றழிக்கப்பட்டதாகவும் புள்ளி விபரங்கள்தரப்பட்டிருந்தன. அச்செய்தியில் அப்போது ஆட்சியில் இருந்த சந்திரிகா குமரதுங்கா தலைமையிலான சிறீலங்கா அரசாங்கப் புள்ளிவிபரம் ஐக்கியநாடுகள் சபையின் ஆய்வை விட அதிக எண்ணிக்கையாகப் 17000 பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொண்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டியது. பிபிசியின் இலங்கைக்கான செய்தியாளர் சூசானா பிரைஸ் அவர்களின் 05.03.1999ம் திகதியச் செய்தியினால் 1998 யூலைமாதத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் செம்மணி என்னும் இடத்தில் 400க்கு மேற்பட்ட தமிழர்கள் சிறீலங்கா இராணுவத்தால் விசாரணைக்கெனக் கொண்டு செல்லப்பட்டுக் கொன்று புதைக்கப்பட்ட புதைகுழிகள் கண்டறியப்பட்டது என்பது பதிவிடப்பட்டது.

இது இலங்கையில் தமிழர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டு வரும் மனிதாயத்திற்கு எதிரான குற்றச்செயல் தொடர்ந்து நடைபெற்று வந்தமையை நிரூபித்தன. 10.11.1999இல் பிபிசியின் தென்னாசியச் செய்தியாளர் அல்ஸ்டயார் லோசனால் "வெல்லப்பட முடியாத யுத்தம்" எனச் சுட்டிக்காட்டிய யுத்தத்தை யுத்தக் குற்றச் செயல்கள் மூலமும் மனிதாயத்திற்கு எதிரான

**தொடர்ச்சி 6ம் பக்கம்**

**5ம் பக்கத் தொடர்ச்சி** குற்றங்கள் மூலமும் சிறீலங்காப்படையினர் 19.05.2009 இல் பத்தாண்டுகளின் பின்னர் முடிவுக்குக் கொண்டு வந்த பொழுது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொகை பல்லாயிரக்கணக்கில் அதிகரித்து இன்றுவரை எவ்வளவு எனச் சிறீலங்கா அரசாங்கத்தால் பொறுப்புக்கூற முடியாதுள்ளது என நோர்வே மனிதஉரிமைப் பாதுகாப்பு நிதிய ஆதரவில் இலங்கையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பேரவையுடன் களஆய்வு செய்துவரும், அரசியலுக்கும் பொருளாதாரத்திற்குமான இலண்டன் பல்கலைகழகப் பள்ளியின் பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு மையத்தின் (Centre for Women, Peace and Security, London School of Politics and Economics) வருகை ஆய்வாளர் யோலண்டா போஸ்டர் (Yolanda Foster) அவர்கள் "சிறிலங்காவில் பாதுகாப்புப் படைகளினால் காணாமலாக்கப்பட்டோர் எவ்வளவு என யாருக்கும் தெரியவில்லை எனவும் ஆனால் பல்லாயிரக்கணக்கு என்பது மட்டும் உறுதியெனத் தனது கள ஆய்வுச் செய்திக் குறிப்பான "சிறிலங்காவில் காணாமலாக்கப்பட்டோரின் நீண்டகால நிழல்கள்" (The Long Shadow of Disappearences in Sri Lanka)இல் கூறியுள்ளார்.



முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் பொழுது தினம் 1000 பேர் வரை கொல்லப்பட்டதாகவும் ஏப்ரல் மாதத்திலேயே யுத்த சூன்யப் பிரதேசத்தில் 7000பேர் கொல்லப்பட்டதாகவும் 29.05.2009ம் திகதிய பிரித்தானிய நாளிதழான 'த டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது என விக்கிப்பீடியா செய்திகள் தெரிவிக்கின்றன. அனைத்துலக மன்னிப்புச் சபையினர் " 1980 முதல் உலகிலேயே அதிக எண்ணிக்கையான காணாமல்போக்கலைச் செய்த நாடாகச் சிறீலங்கா விளங்குகிறது எனவும் 60000 முதல் 100000 வரை அத்தொகை அமையலாமெனவும் இது சிறீலங்காவில் நீதிபரிபாலனம் முறிவுற்ற நிலையில் இருப்பதை எடுத்துக்காட்டுகிறதெனவும், இதனால் இன்றுவரை தங்கள் அன்புக்குரிய குடும்ப உறுப்பினர்களுக்கு என்ன நடந்தது எனத் தெரியாது ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் குடும்பங்கள் இலங்கையில் மிக அதிகம் எனவும், 18.05.2019ம் திகதிய சிறீலங்கா: தண்டனை களிலிருந்து விலக்களித்தல் வன்முறைகளின் மறுநிகழ்வுக்குத் தூபமிடுகிறது (Sri Lanka : Impunity fuels recurrence of violence) என்னும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். அனைத்துலக மன்னிப்புச் சபையினர் 18.05.2018இல் "சிறிலங்கா: வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் பட்டியலை வெளியிடுக (Sri Lanka :Release lists of the forcibly disappeared) என விடுத்த கோரிக்கையில் "போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 9வது ஆண்டு நிறைவுற்ற நிலையில் காணாமல் போனவர்கள் குறித்த தகவல்களை அவர்களின் குடும்பத்தினருக்கு வழங்குவதுடன் போரின் இறுதிக்கட்டத்தில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களின விளக்கமான விபரப் பட்டியலை வெளியிடுமாறும் அனைத்துலக மன்னிப்புச் சபை கோருகிறது.

யூன் மாதம் 2017ம் ஆண்டு இலங்கையின் அரச அதிபர் மைத்திரிபால சிறிசேனா பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களின் மனக்குறைகளைத் தாம் ஏற்றுக் கொள்வதாகவும் விபரப்பட்டியலை வெளியிடுமாறு தேசிய பாதுகாப்புச் சபைக்குத் தாம் அறிவுறுத்துவதாகவும் நம்பிக்கை வாக்குறுதி அளித்தார். தப்பிப்பிழைத்திருக்கும் குடும்ப உறுப்பினர்களின் தகவல்களின்படி நூற்றுக்கு மேற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் வட்டுவாகல் பாலத்திற்கு அருகில் இராணுவத்தினரிடம் சரணடைந்துள்ளனர். கிடைத்துள்ள மற்றோர் அறிக்கைப்படி கத்தோலிக்க குருவான அருட்திரு. பிரான்சிஸ் யோசப் அவர்கள் தலைமையில் சரணடைந்த மற்றோர் தொகுதியினரும் அவருடன் சேர்த்துக் காணாமலாக்கப் பட்டுள்ளனர். கண்கண்ட சாட்சிகளின்படி சரணடைந்தவர்கள் இராணுவப்பாதுகாப்புடன் அணி அணியாக பேருந்துகளில் அழைத்துச் செல்லப்பட்ட பின்னர் இவர்களுக்கு என்ன நேர்ந்ததென இதுவரை தெரியாதுள்ளது. இந்த திரள்நிலையான வலிந்து காணாமலாக் கப்படுதல்களை குறித்து 2017ல் அனைத்துலக மன்னிப்புச் சபை "எங்கள் புண்களை நீதியால் மட்டுமே குணமாக்க முடியும். சிறீலங்காவில் காணாமலாக்கப்பட்ட குடும்பங்களின் கோரல்களைக் கேளுங்கள்" (Only Justice Can Heal Our Wounds: Listening to the Demands of Families of Disappeared in Sri Lanka) என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கையில், 'திரளாகப் போரின் முடிவில் காணாமலாக்கப்பட்டமை செயற்படுத்தப்பட்ட விதங்கள் திட்டமிட்ட முறையில் வலிந்து 'காணாமலாக்கப்படுதல்" நிறுவனமாக்கப்பட்ட ஒன்றாக உள்ளது என்பதற்கான வெளிப்படையான சுட்டுதலாக அமைகிறது.

அரசாங்கம் காணாமலாக்கப்பட்டவர்கள் எங்கு உள்ளனர் அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்ற தகவல்களை மறைப்பது குற்றச்செயல்களைத் தூண்டுவதற்கான பொறுப்பாளராக அரசை கருதவைக்கிறது" என வெளிப்படையாகக் குற்றம்சாட்டியிருந்தது. 2013ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் கடைசியாக சிறீலங்கா இராணுவத்தின் 58வது பிரிவின் பாதுகாப்பில் காணப்பட்ட 13 பேர் குறித்து சிறீலங்கா நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுவுக்கு (Habeas Corpus), பெப்ருவரி 2016 இல் மேஜர் ஜெனரல் கவிந்த சாணக்கிய குணவர்த்தனாவுக்கு முல்லைத்தீவு மஜிஸ்ரேட் நீதிமன்றம் 19.04.2016இல் சமுகமளித்துப் பட்டியலைத் தாக்கல் செய்யுமாறு பணித்தது. ஆயினும் இரண்டு தவணைகள் கொடுத்தும் பட்டியலைச் சமர்ப்பிக்கத் தவறியமையால் செப்டெம்பர் 2016இல் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு குற்றவியல் விசாரணை செய்யுமாறு நீதிமன்றம் ஆணையிட்டது. இதற்கு அரசாங்கம் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களின் பட்டியலே இராணுவத்திடம் உள்ளது மற்றையவர்கள் சரணடைந்தபொழுது பட்டியலிடப்படவில்லை என இறுதியாகப் பதிலளித்தது". என அனைத்துலக மன்னிப்புச்சபை தனது இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியது.

கூடவே முப்படைகளின் தலைவரும், தேசிய பாதுகாப்புச் சபையின் தலைவருமான அரச அதிபர் ஆயுதப்படைகளிடம் சரணடைந்தவர்களின் பட்டியலை வெளியிடுமாறு தாம் பணிப்பதாக வாக்குறுதி அளித்த போதிலும் இவ் அறிக்கை வெளிவரும்வரை 11 மாதங்கள் எதுவும் நடக்கவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தது. போரின் இறுதிக்கட்டத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் குறித்து தாயகத்திலும் வெளிநாடுகளிலும் ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் அலுவலகத்திலும், அரசாங்கம் நியமித்த கற்றுக்கொண்ட பாடங்களும் மறுவாழ்வும் ஆணையக சரணடைந்து அல்லது கைதுசெய்யப்பட்டுக் காணாமலாக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகள் அமர்விலும் தொடர்ச்சியாக முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டு வந்துள்ளன. இந்த முயற்சிகளின் வழி மார்ச் 2018இல் காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டாலும் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் உண்மைகளைத் தேடும் முயற்சிக்கு கடந்த பத்தாண்டாக சிறீலங்கா அரசாங்கம் பெரிதளவில் ஊக்கமளிக்காதிருப்பதாகவும் அனைத்துலக மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பாதிப்புற்ற குடும்பங்களில் பெண்களே தங்களுக்கான உண்மைகளை வெளிப்படுத்தும்படியும் நீதியை வழங்குமாறும் மறுவாழ்வை சீரமைக்குமாறும் முன்னணிப் போரட்டங்களை சனநாயக வழிகளில் நடத்த வேண்டிய நிலை இலங்கையில் காணப்படுகிறது என நோர்வேயின் மனிதஉரிமை பாதுகாப்பு ஆய்வுத்திட்டத்தில் இலங்கை நிலை குறித்த ஆய்வாளராக யோலண்ட் போஸ்டர் தனது " சிறீலங்காவில் காணாமலாக்கப்பட்டோரின் நீண்டகால நிழல்கள்" (The Long Shadow of Disappearences in Sri Lanka) என்னும் களஆய்வுக் குறிப்பில் தெரிவித்துள்ளதுடன் இப்பெண்கள் பாலியல் ரீதியாகவும் படைபல ரீதியாகவும் அச்சுறுத்தல்களை எதிர் கொண்டு போராட வேண்டியுள்ளதால் கூட்டுச் செயற்திட்டம் (Collective Action) ஒன்று அவர்களுக்குப் பக்கத்துணையாக அமைய வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். தற்பொழுது யாழ்ப்பாணத் தாய்மார் முன்னணியும் தென்னிலங்கைத் தாய்மார் முன்னணியும் சிலவிடயங்களில் இணைந்து குரல் எழுப்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, மாடன்கேணி, வவுனியா முதலிய பகுதிகளில் 2018ம் ஆண்டு பெப்ருவரி முதலாகத் தொடராகவும் சுழற்சி முறையிலும் நடைபெற்று வரும் காணாமலாக்கப்பட்டோர் குறித்த உண்மைகளை கண்டறியவும் நீதிவிசாரணைகளை நடாத்துவிக் கவும், வாழ்வின் கட்டமைப்புக்களை மறுசீரமைக்கவும் நடாத்தப்பட்டு வரும் தாய்மார்களின் இப்போராட்டம் 900 நாட்களைத் தாண்டிய நிலையிலும் ஆண்களும் பெண்களுமாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 20 பேருக்கு மேல் தங்கள் பிள்ளைகளைக் கணவரைக் குறித்த விபரங்களை அறியாமலே மரணித்து விட்ட நிலையிலும் இவர்களது இந்த உண்மைக்கான நீதிக்கான கோரிக்கை உலகின் கவனத்தை உரிய முறையில் பெறவில்லை என்பதை இன்று அனைத்துலக வலுக்கட்டாயமாகக் காணாமலாக்கப்பட்டோர் தினத்தில் மிகுந்த கவலையுடன் உங்கள் கவனத்திற்கு தெரிவிக்க விரும்புகின்றோம்.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் சபையின் தலைவி மிசல் பக்லட் (Michelle Bachelet) அவர்கள் "பெரும் குழப்பநிலையை உருவாக்குகிறது" என 19.08.2019 இல் குறிப்பிடும் அளவுக்கு, யுத்தக்குற்றச் செயல்கள் பலவற்றுக்கும் மற்றும் மனிதாயத்திற்கு எதிரான குற்றங்கள் பலவற்றுக்கும் பொறுப்பாளர் எனப் பல ஐக்கியநாடுகள் சபையின் அறிக்கைகளால் கருதப்படும் சிறீலங்கா இராணுவ 58வது பிரிவுக்குப் போரின் இறுதிக்காலத்தில் தளபதியாக இருந்த சவேந்திர சில்வாவை சிறிலங்கா இராணுவத்தளபதியாக சிறீலங்காவின் அரச அதிபர் நியமித்துள்ளமை சிறீலங்கா காணாமலாக்கப்பட்டவர்களுக்கான உண்மைகளை வெளிப் படுத்தும் பொறுப்புக்கூறலோ அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி வழங்கலையோ செய்யாது என்பதையும் அனைத்துலக வழிகாட்டல்கள் எதற்கும் தலைசாய்க்காது என்பதையும் தற்போது மீளவும் உறுதிப்படுத்தியுள்ளது. எனவே உலகின் நீதிக்கும் அமைதிக்கும் உழைக்கும் உங்களிடம் இலங்கையில் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாது தங்கள் குடும்ப உறுப்பினர்களின் காணாமல்போன நிலை குறித்த உண்மையை அறியவும் நீதியைப் பெறவும் நட்டஈடுகளை அடையவும் போராடும் உலகால் மறக்கப்பட்ட மக்களாக உள்ள தமிழ்த்தாய்மாருக்கும் தந்தைமாருக்கும் கிட்டிய குடும்ப உறுப்பினர்களுக்கும் உங்களால் இயன்ற உதவியினை உடன் செய்யுமாறு அனைத்துலக வலுக்கட்டாயமாகக் காணாமலாக்கப்பட்டோர் தினமாகிய இன்று மனிதாயத்தின் பேரால் பணிவன்பாக வேண்டுகின்றோம்.

கடந்த இதழ்த் தொடர்ச்சி...

**சிறிலங்கா அரசு தமிழர்கள் மீது மேற்கொண்ட திட்டமிட்ட இன அழிப்புக்கும் போர்க்குற்றங்களுக்கும் ஐ.நாவின் ஊடாக நீதியைப் பெற்று கொள்ளலாம் என்று நினைக்கிறீர்களா?**



வேண்டும். இறுதியாக தமிழினப் படுகொலைக்கு தீர்வு காணும் முகமாக ஒவ்வொரு நாட்டு பாராளுமன்றங்களுடனும் இணைந்து வேலைசெய்ய வேண்டிய தேவையுள்ளது. தாயகத்தில் இருந்து பாதிக்கப்பட்ட தரப்பினரும், சாட்சியாளர்களும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் ஒவ்வொரு ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடருக்கும் வருகைதர வேண்டும். அத்துடன் தமிழர் அமைப்புக்கள் எம்முடன் இணைந்து செயற்பட வேண்டும். அத்தோடு ப்ரஸ்செல்ஸ் மற்றும் ஜெனீவாவில் வசிக்கின்ற இளம் சமுதாயத்தினர் ஆகக்குறைந்தது 25 பேராவது எம்முடன் இணைந்து செயலாற்ற வேண்டிய தேவையுள்ளது.

**தற்போது தாயகத்திலே தீவிரமடைந்துள்ள கட்டமைப்புசார் இன வழிப்பை தடுப்பதற்கு ஐ.நா மன்றத்தின் மூலமாக எத்தகைய நடவடிக்கைகள் மேற் கொள்ளலாம்?**

நாங்கள் ஒவ்வொரு ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரின் போதும் பக்கவறை நிகழ்வுகளின் ஊடாகவும் எழுத்து மற்றும் வாய்மூல அறிக்கைகள் ஊடாகவும் ஆகும். இவ் விழுமியம் ஆனது சர்வதேச அமைப்புக்களூடாக ஏற்கனவே இடம்பெற்ற இனவழிப்புக்கள் மற்றும் எதிர்காலத்தில் இனவழிப்பு ஒன்று இடம்பெறாமல் தடுப்பதற்காகவும், போர்க்குற்றம், இனச்சுத்திகரிப்பு மற்றும் மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றை தடுப்ப தற்கே ஏற்படுத்தப்பட்டதாகும்.

இவ் விழுமியத்தின் முதல் தீர்மானமானது தமிழின அழிப்பு இடம்பெற்ற பின்னரே ஐ.நா. பொதுச்சபையில் செப்டெம்பர் 14 2009 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த தீர்மானம் ஆனது (A/RES/63/308) கௌதமாலா நாட்டின் பிரதிகள் மற்றும் 67 உறுப்பு நாடுகளின் இணை அனுசரணையுடன் அறிமுகப்படுத்தப்பட்டது.

பாதிக்கப்பட்ட தரப்பாகிய நாம் ஐ.நா பொதுச்சபையுடன் இணைந்து வேலை செய்வதற்கான அடுத்தகட்ட நடவடிக்கயை எடுப்பதுடன் சரியான வேலைத்திட்டங்களை சர்வதேச சமூகத்தின் ஊடாக நகர்த்திச் செல்ல வேண்டும். விசேடமாக இத் தீர்மானத்தை அறிமுகப்படுத்திய கௌதமாலா நாட்டுடனும்

# தமிழர் தரப்புக்களிடையே ஆக்கபூர்வமான
## கலந்துரையாடல்களும் ஒருமித்த செயற்பாடுகளும் அவசியம்

ஐ.நா.விலிருந்து மனித உரிமைச் செயற்பாட்டாளர்

**பொஸ்கோ**

தாயகத்திலே எமக்கான நீதி கிடைக்க முடியாதென்ற நிலையில் ஐ.நாவினூடாக எமக்கான நீதியை பெற்றுக் கொள்வதற்கான முயற்சியை அநீதிக்குள்ளான ஒரு பேரினம் தன்னாலான முயற்சிகளை நிச்சயம் காத்திரமான முறையில் மேற்கொண்டே ஆக வேண்டும். திட்டமிட்ட முறையில் எமது வளங்களை ஒழுங்குபடுத்தி இடைவிடாத முயற்சியை தமிழர் தரப்பு ஒரே நிலைப்பாட்டோடு மேற்கொண்டால் கால ஓட்டத்தில் எதுவுமே சாத்தியமானதுதான். அதற்கு தமிழர் தரப்புக்களிடையே ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களும் ஒருமித்த செயற்பாடுகளுமே பிரதானமாக இருக்க வேண்டும். சுயநிர்ணய உரிமைகோரி போராடும் இனங்களின் தேசத்தினை தனிநாடாக அங்கீகரிக்க வேண்டுமெனில் ஐ.நா பொதுச்சபையில் மூன்றில் இரண்டு பெருமான்மையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**2009 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த தமிழர் இனவழிப்பை ஐக்கிய நாடுகள் சபையிலோ அல்லது சர்வதேச நீதிமன்றத்திலோ நிருபிப்பதற்கு என்ன வகையான பொறிமுறைகள் இருக்கின்றன?**

நாம் முதலில் தமிழினப் படுகொலை தொடர்பில் நெதர்லாந்து நாட்டின் கெக் நகரில் அமைந்துள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சர்வதேச கூட்டணிகளுடன் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அத்துடன் ஜெனீவாவில் உள்ள ஐ.நா சபை பொறிமுறைகள் மட்டுமல்லாது வியன்னா மற்றும் நியூயோர்க் ஆகிய இடங்களிலும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். மேலும் பிராந்திய நிறுவனங்களான



ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஆபிரிக்க ஒன்றியம் ஆகியவற்றுடனும் ஏனைய பிராந்திய அமைப்புக்களுடனும் இணைந்து செயலாற்ற

சர்வதேசத்திற்கு தமிழீழத்தில் சிறிலங்கா அரசினால் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் கட்டமைப்புசார் தமிழின அழிப்பு தொடர்பாக தெரியப்படுத்தி வருகின்றோம். அத்துடன் ஐ.நா சபை சார்ந்த விசேட பிரதிநிதிகளுக்கும் மனித உரிமைகள் ஆணையாளருக்கும் அனைத்து நாடுகளுக்குமான கால மீளாய்வு பொறிமுறைக்கும் (UPR Process ),ஒப்பந்த அடிப்படையிலான நாடுகளுக்கும் தாயகத்தில் இருந்து பெறப்பட்ட அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் செயற்பாடுகள் ஒரு வருடத்தில் 250 நாட்கள் இடம்பெறுகின்றன. ஆனால் நாம் மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் இடம்பெறும் காலப்பகுதியில் மாத்திரமே அங்கு செல்கின்றோம். மற்றும் ஐ.நா. சபையின் பிரிவுகளான ஐ.நா. பொதுச்சபை, ஐ.நா பாதுகாப்பு சபை, ஐ.நா பெண்கள் அமைப்பு, ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக குழு (ECOSOC) யுனெஸ்கோ, யுனிசெப் மற்றும் ஒலிம்பிக் குழு ஆகிய அனைத்து பொறி முறைகளையும் நாம் உரிய வகையில் பயன்படுத்தி செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

**இனப்படுகொலை விடயத்தில் சர்வதேச நாடுகளோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையோ செய்யத்தவறிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எவை என்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

பொதுமக்களின் பாதுகாப்பிற்கான கட்டப்பாடு என்பது ஐ.நா பாதுகாப்புச் சபையில் புதிதாகக் கொண்டுவரப்பட்ட ஒரு சர்வதேச பாதுகாப்பு மற்றும் மனித உரிமைக்கான விழுமியம்

அதனுடன் இணைந்த செயற்பட்ட உறுப்பு நாடுகளுடனும் ஆழமாக வேலை செய்ய வேண்டும்.

**இலங்கை அரசு ஐ.நாவின் கோரிக்கைகளை தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. இதனை தமிழர் தரப்பு எவ்வாறு கையாளவேண்டும்.**

தமிழ்நாடு மாநில சட்டமன்றத் தீர்மானம் மற்றும் கனடா நாடாளுமன்றத் தீர்மானங்கள் போன்ற தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு சர்வதேச நாடுகளின் பிராந்திய மற்றும் தேசிய நாடாளுமன்றங்களுடன் இணைந்து தமிழ் உரிமை ஆர்வலர்கள் பணியாற்றல் வேண்டும். இதனூடாகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிலுள்ள நாடுகளிற்கு ஓர் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான வலுவான முன் முயற்சியெடுக்க அழுத்தம் கொடுக்க முடியும். ஐ.நா முகவர் மட்டத்தில் அதன் தீர்மானங்களையும் செயற்பாடுகளையும் ஆதரிக்கக் கூடிய நாடுகளைக்கொண்ட ஓர் குழுவை நாம் உருவாக்க வேண்டும். இவ் ஆதரவைப் பெற்றுக்கொள்ள அந் நாடுகளுடனிணைந்து வேலை செய்வதுடன், அதன் பாராளுமன்றங்களில் தமிழினவழிப்பை அங்கீகரிக்கும் தீர்மானங்களை நிறைவேற்றல் வேண்டும் அவ் வகையில் நாடுகளின் ஆதரவைத் திரட்டுவதற்கான செயற்பாட்டு வரைபு எம்மிடம் இருத்தல் அவசியம். தமிழீழத்தில் இராணுவ ஆக்கிரமிப்பு குறித்த பாரிய பிரச்சாரம்:

- உயர் பாதுகாப்பு மண்டலம் மற்றும் பொது மக்கள் மீதான அதன் விளைவு
- சிறுவர்கள் மீதான இராணுவ ஆக்கிரமிப்பின் விளைவு
- பெண்கள் மீது இராணுவ ஆக்கிரமிப்பின் விளைவுகள்
- தமிழர்களின் வாழ்வாதாரங்கள் மீதான இராணுவ ஆக்கிரமிப்பின் விளைவு
- 30/1, 34/1 மற்றும் 40/1 தீர்மானங்களை செயல்படுத்தாமை தொடர்பான அறிக்கைகள்
- தமிழர்கள் ஏன் OMPஐ அங்கீகரிக்கவில்லை என்பது குறித்த அறிக்கை
- PTA மற்றும் CTA பற்றிய அறிக்கைகள்

**இதில் தமிழ் அரசியல் பிரதிநிதித்துவங்களின் வகிபாகம் மற்றும் நகர்வுகளை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

இலங்கை தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களில் தமிழ் அரசியல் வாதிகளின் எந்தவொரு வகிபாகமும் இருக்கவில்லை. மாறாக மேற்படிதீர்மானங்கள் நிறை வேற்றப்பட்ட பின்னர் மேற்கத்தைய நாடுகளின் ஊடகப் பேச்சாளர்களாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிப்பதன் மூலம் தமிழீழத்தில் இடம்பெற்ற தமிழின அழிப்பினை மறுத்துநிற்கின்றனர்.

# ஆணைபெற்ற தமிழ் தலைமைகளால் தமிழர்கள் எந்தவித விமோசனத்தினையும் பெறவில்லை

"தமிழர்களின் நீதிக்கோரிக்கையையும் தமிழினத்தினை அழிக்கும் அரசாங் கத்தின் திட்டத் தினையும் எழுக தமிழ் எழுச்சிப்பேரணி சர்வதேசத்திற்கு எடுத்துரைக்கும்"



தமிழ் மக்களின் ஆணைபெற்ற தமிழ்த் தலைவர்களைப் பொறுத்தவரையில் அவர்களால் இயலுமான விடயங்களையே செய்கின்றார்கள். அவற்றால் தமிழ் மக்கள் எவ்விதமான விமோசனத்தினையும் பெறவில்லை. ஆகவே அவர்களை விமர்சிப்பதால் எவ்விதமான பயனும் கிடைக்கப் போவதில்லையென தமிழ் மக்கள் கூட்டணியின் உபதலைவரும் மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினரும், தமிழ் மக்கள் பேரவையின் கிழக்கு மாகாண நிருவாகச் செயலாளருமான சி.சோமசுந்தரம் இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய செவ்வி—யிலேயே அவ்வாறு குறிப்பிட்டார். அந்தச் செவ்வியின் முழுவடிவம் வருமாறு...

**கேள்வி: சமகாலச் சூழலில் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் நிலைமைகள் எவ்வாறு உள்ளன?**

பதில்: கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் அண்மைக்காலமாக அதிகரித்தவண்ணமுள்ளன மிகவும் சிக்கல்கள் நிறைந்த இப்பிரச்சினைகள் வெகுவாக அதிகரித்துச் செல்கின்றமையானது பல்வேறு அச்சங்களையே முதலில் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றன. குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்ற நிலங்கள் திட்டமிட்ட வகையில் கபளீகரம் செய்யப்படுகின்றன. இதனைவிடவும் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்கள், வரலாறு இடங்கள் போன்ற அனைத்தும் திட்டமிட்ட வகையில் கையகப்படுத்தப்பட்டு அவற்றினை தமிழர்களுடன் தொடர்பற்ற பகுதிகளாக அடையாளப்படுத்துவதற்கான செயற்பாடுகள் அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதனைவிடவும், தமிழர்கள் தமது நிருவாகச் செயற்பாடுகளுக்கான கோரிக்கைகளை முன்வைத்து நிருவாக அலகுகளை கோருகின்றபோது சொற்ப விடயத்தினைக் கூட பூதாகாரமாக்கி ஒருபிரதேசத்தில் கூட அதிகாரத்தினை கோருவதற்கு தகுதியற்றவர்கள் என்று அடிமைப்படுத்த விளைகின்ற மனநிலை போக்கு அதிகரித்துச் செல்கின்றது.

இதனைவிடவும் ஒருமொழிபேசுகின்ற இருசமூகங்கள் வாழுகின்ற கிழக்கு மாகாணத்தில் பகிரங்கமாக கூறமுடியாத பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றோம். எல்லைக்கிராமங்களை பறிகொடுப்பது முதல் எம்முறவுகளையும், அடையாளங்களையும் இழக்க வேண்டிய சூழ்நிலைகள் தோற்றம்பெற்றுவருகின்றன.

இதனைவிடவும் கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழர்களுக்கு மத்தியில் காணப்படுகின்ற பிளவுகளை சாதுரியமாக பயன்படுத்தி எமது இருப்பையே கேள்விகுள்ளாக்குகின்ற செயற்பாடுகளும் செவ்வனே முன்னெடுக்கப்பட்டு வருகின்ற துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆகவே கிழக்கில் எமது அடையாளங்களை வெளிப்படுத்தி எமது இருப்பினை திடகாத்திரமாக உறுதிப்படுத்துவதற்கான தலைமையின் கீழ் அனைத்து தரப்பினரும் அணிதிரள வேண்டும் என்பதே எமது கோரிக்கையாக உள்ளது. இல்லாது விட்டால் முக்கால்வாசியை பறிகொடுத்த நாம் முழுமையாக அனைத்தையும் இழக்க வேண்டிய நிலைமைக்கே தள்ளப்படுவோம். இதனால் கிழக்கில் தமிழினம் முற்றாக அழிந்துவிடும் நிலை ஏற்படும் என்பது தான் நிதர்சனமான உண்மையாகும்.

**கேள்வி : வலிந்து காணாமாலாக்கப்பட்டவர்களுக்கான நீதிகேட்டு அவர்களின் உறவுகளால் தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் அதற்கான தீர்வினை எவ்வாறு பெறமுடியும் எனக் கருதுகின்றீர்கள்?**

பதில்:— எமது உறவுகள் அசாதாரண சூழலிலும், இறுதி யுத்தத்தின்போதும் தமது உறவுகளைப் பறிகொடுத்து இற்றைக்கு ஒரு தசாப்த காலமாக தொடர்ச்சியாக வீதிகளில்

**தமிழ்மக்கள் கூட்டணியின் உபதலைவர்**
**சோமசுந்தரம்**

போராட்டங்களை முன்னெடுத்துவருகின்றார்கள். தாயகத்தின் எட்டு மாவட்டங்களிலும் இந்தப்போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

உள்நாட்டில் இந்த விடயத்திற்குரிய தீர்வினை வழங்குவதாக மாறிமாறி ஆட்சிக்கு வந்த சிங்கள, பௌத்த பேரின அரசாங்கங்கள் வாக்குறுதிகளை வழங்கி ஆணைக்குழுக்களையும் அலுவலகங்களையும் நியமித்தாலும் அவையெல்லாமே வெறும் கண்துடைப்பு செயற்பாடுகளே. உள்நாட்டில் உறவுகளைப் பறிகொடுத்த மக்களின் அழுத்தங்களை நீர்த்துப்போகச் செய்து அவர்களை திசைதிருப்புவதற்கான செயற்பாடுகளாகவே அவை அமைகின்றன. ஆனால் அண்மைக்காலத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தற்போதைய ஆட்சியாளர்கள் பொறுப்புறுக்கூறல் பொறிமுறைகளை முன்னெடுப்போம் என்று கூறி அதற்காக கால அவகாசத்தினைப் பெற்றுள்ள சூழலிலும் அவர்களும் இந்த விடயத்தில் கண்கட்டிவித்தையே செய்கின்றார்கள். அவர்கள் உறவுகளை மட்டுமன்றி முழுச் சர்வதேசத்தினையும் ஏமாற்றுவதற்கான நடவடிக்கைகளையே மேற்கொண்டுள்ளார்கள். இதற்காக காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகங்களை ஸ்தாபித்து அவ்வப்போது பிராந்திய காரியாலங்களையும் திறக்கின்றார்கள். இவை அனைத்துமே சர்வதேசத்தினை ஏமாற்றி தொடர்ந்தும் பொறுப்புக்கூறலை தாமதப்படுத்துவற்கான நாடகமாகும். இதனை சர்வதேச நாடுகள் புரிந்துகொள்ள வேண்டும். நீதிக்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவுகள் சர்வதேச காணாமலாக்கப்பட்ட தினமன்றும் கல்முனையிலும், தமது உறவுகளை படையினரிடத்தில் கையளித்த ஓமந்தையிலும் பாரிய கனவனயீர்ப்பு போராட்டத்தினை மேற்கொண்டுள்ளனர்.

ஆகவே இந்த விடயம் ஆறிப்போன பழங்கஞ்சியாக என்றுமே கொள்ளமுடியாது என்பதை சர்வதேசம் புரிந்துகொண்டு உணர்வுகளுடன் தொடர்புடைய இவ்விவகாரத்தினை சர்வதேச தலையீட்டுடன் குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றாவது எமது மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இந்த விடயத்தில் சற்றேனும் கூட சர்வதேசம் தாமதிக்கக்கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும். அவ்வாறு தாமதிக்கின்றபோது தங்களது உறவுகளுக்காக ஏங்கிப் போராடிக் கொண்டிருக்கும் உறவுகள் தமது இறுதி ஆசைகளைக் கூட நிறைவேற்றாது உயிர்களை மாய்க்கின்ற நிலைமைகளே அதிகரித்துச் செல்லும் பேராபத்து நிகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

**கேள்வி : சவேந்திர சில்வா இராணுவத்தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில்: பேரினவாத அரசாங்கங்கள் தமது மனநிலையில் எள்ளவும் மாற்றத்தினைக் கொள்ளவில்லை என்பதையே இந்த நியமனம் வெளிப்படுத்தியுள்ளது. ஆயுத ரீதியிலான எமது உரிமைப் போராட்டத்தினை பயங்கரவாதமாகச் சித்தரித்து ஆயிரக்கணக்கானோரை கொன்றுகுவித்த ஒருவருக்கு அதியுயர் பதவி வழங்கப்படுகின்றது என்றால் தமிழர்கள் குறித்து தென்னிலங்கை தலைவர்களின் கரிசனையை தெளிவாக உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. தற்போது இராணுவத்தளபதி நியமிக்கப்பட்டிருக்கின்றார். அடுத்துவரும் காலத்தில் சனாதிபதியும் அத்தகைய மனநிலை கொண்ட ஒருவர் வருவாரானால் தமிழர்கள் நாடற்ற அநாதைகளாக்கப்பட்டுவிடும் ஆபத்தே உள்ளது.

**கேள்வி: செப்டம்பர் 16இல் நடைபெறும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் கிழக்கு தமிழர்களின் வகிபாகம் எவ்வாறு அமையப்போகின்றது?**

பதில்:— தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் அதன் இணைத்தலைவரும், எமது கட்சியின் பொதுச்செயலாளருமான நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் தலைமையில் எழுக தமிழ் நிகழ்வானது தாயகத்தின் எட்டுமாவட்டங்களையும் உள்ளடக்கியவாறு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தாயகத்தின் அனைத்துப்பிரதேசத்திலும் இருந்து பெருந்திரளானவர்கள் பங்கேற்பதற்கான ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழர்களின் தாயகம் தற்போது சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பின் பிடிக்குள் வெகுவாக சிக்கியுள்ளது. எமக்கு பாரம்பரியங்கள் பறிபோகின்றன. எமது இழைக்கப்பட்ட எந்தவொரு அநீதிகளுக்கும் நீதி கிடைப்பதாக இல்லை. பொறுப்புக்கூறல் என்ற பேச்சுக்கே இடமில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது எட்டாக்கனியாக உள்ளது.

ஆயுதப்போராட்டத்தினை மௌனித்து விட்டோம் என்ற மமதையில் சிங்கள பேரினவாதம் தனது கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு நிகழ்ச்சி நிரலை அரங்கேற்றிக்கொண்டிருக்கின்றது. இந்த நிலைமைகளை நாம் சர்வதேசத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். பேரினவாத ஆட்சி முதல் நல்லாட்சி வரையில் தமிழர்களுக்கு எந்தவிமோசனமும் கிடைக்கவே இல்லை என்பதை சர்வதேசத்திற்கு உரத்துக் கூறவேண்டும். இதற்கான கிழக்கு மாகாண தமிழர்கள் முழுமையாக தமது ஆதரவை வழங்குவதற்கு முன்வந்துள்ளார்கள். இது தனிப்பட்ட நபர்கள் சார்ந்த பிரச்சினை அல்ல. ஒட்டுமொத்த தமிழர்களின் இருப்பு சம்பந்தமான பிரச்சினை. ஆகவே தான் இந்த எழுச்சிப்பேரணியில் அனைவரும் பேதமின்றி கலந்து சர்வதேசத்திற்கு அழுத்தமாக எமது நிலைமையை உரத்துச் சொல்ல தலைப்பட்டிருக்கின்றோம் என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஆகவே எழுக தமிழ் எழுச்சிப்பேரணி மாபெரும் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. கிழக்கின் பல்வேறு அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் தமது ஆதரவினை வழங்குவதற்கு முன்வந்துள்ளன.

**கேள்வி : ஆணைபெற்ற தமிழ்த்தலைவர்கள் தமிழ் மக்களின் விடயங்களை கையாளுகின்றமையை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்:நான் தந்தை செல்வாவின் பாசறையில் உருவான தமிழரசுக்கட்சியின் உறுப்பினராகவே ஆரம்பகாலத்தில் இருந்தேன். தற்போது அந்தக்கட்சியிலிருந்து வெளியேறிவிட்டேன். அந்தக்கட்சியின் தலைவர்களைப்பொறுத்தவரையில் அவர்களால் இயலுமான விடயங்களையே செய்கின்றார்கள். அவற்றால் தமிழ் மக்கள் எவ்விதமான விமோசனத்தினையும் பெறவில்லை. ஆகவே அவர்களை விமர்சிப்பதால் எவ்விதமான பயனும் கிடைக்கப்போவதில்லை. அவர்களை விமர்சித்துக்கொண்டிருப்பதால் எம்மால் முன்னெடுத்துச் செய்ய வேண்டிய கடமைகளே தாமதமடைந்துவிடும். நாம் எல்லாவற்றையும் இழந்து விட்டோம். இனி இழப்பதற்கு எதுவும் இல்லை. ஆகவே இருக்கின்றவற்றை பாதுகாக்க வேண்டும். அதற்காகவே தமிழ் மக்கள் பேரவை அமைக்கப்பட்டது. அதன்மூலம் எமது பிரச்சினைகளை முன்வைத்துள்ளதோடு தீர்வு தொடர்பிலும் தெளிவான நிலைப்பாட்டினை குறிப்பிட்டோம். ஆயுதபோராட்டம் மௌனிக்கப்பட்ட நிலையில் தந்தை செல்வா காட்சிய அஹிம்சை வழியில் மக்கள் எழுச்சிப்போராட்டங்களை முன்னெடுப்பது தான் எமக்குள்ள ஒரே வழியாகும்.

# ரணிலின் அதிரடி நகர்வுகள் சஜித்தின் வாயை மூடுமா?

**பூமிகன்**

சனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு அடுத்த மாதம் வெளிவரும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், இரண்டு பிரதான முகாம்களிலும் உருவாகியிருக்கும் உள்ளகப் பிரச்சினைகள்தான் இந்த வாரமும் கொழும்பு அரசியலில் பிரதான செய்தியாகியிருக்கின்றது. நவம்பர் இறுதியில் அல்லது — டிசெம்பர் முதல் வாரத்தில் சனாதிபதித் தேர்தல் நடைபெறும். அதனால் அக்டோபரில் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளிவரும் என்பதால், பிரதான கட்சிகள் அதற்குத் தயாராக உள்கட்சி மோதல்களும் தீவிரமடைந்திருக்கின்றது. அவை குறித்து இந்த வாரமும் பார்ப்போம்.

வேட்பாளரை தெரிவு செய்வதில் ஐ.தே.க.வில் முரண்பாடுகள் தொடரும் நிலையில் 3 அதிரடியான நகர்வுகளை ரணில் மேற்கொண்டிருக்கிறார்.

முதலாவது — சனாதிபதி வேட்பாளர் யார் என்பது அந்த தேர்தல் தொடர்பில் தேர்தல் திணைக்களம் அறிவித்த பின்னரே முடிவு செய்யப்படும் என அவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. கட்சியின் யாப்பில் இவ்வாறுதான் குறிப்பிடப் பட்டிருக்கின்றதாம். அதாவது, சனாதிபதித் தேர்தல் குறித்த அறிவித்தல் வெளிவந்த பின்னர் செயற்குழு அதனை ஆராய்ந்து — வேட்பாளர் நியமனக்குழு ஒன்றை அமைத்து அதன் மூலமாகவே தெரிவு இடம்பெறும் என்பதுதான் கட்சியின் யாப்பு விதி என்கின்றார்கள் இவர்கள். இதனால், சஜித் தரப்பு இப்போது வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும் என்பது இவர்களுடைய நிலைப்பாடு.

இதனைவிட சஜித்துக்கு ஆதரவாக செயற்பட்ட கட்சியின் எம்.பி.க்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஹரின் பெர்னான்டோவை அழைத்த ரணில் இது குறித்து நேரடியாகவே எச்சரித்திருக்கின்றார். சஜித்துக்கு ஆதரவாக பதுளையில் இடம்பெற்ற முதலாவது கூட்டத்தை ஏற்பாடு செய்தவர் இவர்தான். இந்த இரு நகர்வுகள் மூலமாக சஜித்துக்கு ஆதரவாக மேற்கொள்ளப்பட்டு வந்த பிரச்சாரங்களை முடிவிற்கு கொண்டு வந்துவிட முடியும் என ரணில் தரப்பு கருதுகிறது.

தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியான பின்னரே தமது வேட்பாளர் அறிவிக்கப்படுவார் என ரணில் தரப்பில் தெரிவிக்கப்பட்டு இருக்கின்ற போதிலும், அதற்கு முரணான கருத்து ஒன்றும் அந்தத் தரப்பிலிருந்தே முன்வைக்கப்பட்டிருக்கின்றது. வெளிநாட்டுத் தூதுவர்கள் சிலரை கடந்த வாரம் சந்தித்த ரணில், தன்னுடைய மாலைதீவுப் பயணத்தை முடித்துக் கொண்டு வந்த பின்னர் வேட்பாளர் யார் என்பதை அறிவிக்கப் போவதாகவும் கூறியிருக்கின்றார். இன்று ஞாயிற்றுக்கிழமை மாலைதீவு புறப்படும் அவர் வியாழன் கொழும்பு திரும்புவார்.

கட்சியின் சனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் உருவாகியிருக்கும் நெருக்கடிகளை தவிர்க்கும் நோக்கத்துடனேயே இவ்வாறு அவர் அறிவித்திருக்கிறார். இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் சில ஸ்கேண்டினேவியன் நாடுகளின் தூதுவர்களை இராப்போசன விருந்துபசாரம் ஒன்றுக்கு அழைத்த ரணில், தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும் சனாதிபதித் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறார் என்பது குறித்தும் பேசினார். சஜித் தான்தான் சனாதிபதி வேட்பாளர் என கூறிக் கொண்டிருக்கும் நிலைமையில் வெளிநாட்டு ராஜதந்திரிகளை பிரதமர் எதற்காக சந்தித்தார் என்ற கேள்வி பல்வேறு மட்டங்களிலும் எழுகிறது.

சஜித்தை விட சர்வதேச ஆதரவு தனக்குத்தான் அதிக அளவில் இருக்கிறது என்பதை காட்டிக்கொள்வது இந்த சந்திப்பின் நோக்கங்களில் ஒன்றாக இருக்கலாம். சர்வதேச விவகாரங்களைக் கையாளக்கூடிய ஒருவராக சஜித் இல்லை என ரணில் தரப்பினர் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தனது நம்பிக்கைக்குரிய ஆதரவாளராக ரவி கருணாநாயக்கவின் இல்லத்தில், உத்தியோகப்பற்றற்ற ஒரு சந்திப்பாகவே வெளிநாட்டுத் தூதுவர்களுடனான இந்த சந்திப்பை ரணில் நடத்தினார்.



இருந்தபோதிலும் ரணிலின் இந்த நகர்வுகள் சஜித்தின் போக்கைத் தடுத்து நிறுத்தி விடுமா என்பது கேள்விக் குறியாகத்தான் இருக்கின்றது. சஜித்துக்கு ஆதரவு தேடி முன்னெடுக்கப்பட்டுவரும் பேரணிகள் தொடரில் மூன்றாவது குருநாகலில் செப்டம்பர் ஆறாம் திகதி நடைபெறவுள்ளது. இந்தப் பேரணிகள் ரணில் தரப்புக்கு பெரும் சங்கடத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. அதனைவிட சஜித்தை பிரபலப்படுத்துவதற்கான செயற்பாடுகள் பல்வேறு மட்டங்களிலும் முன்னெடுக்கப்படுகின்றது. ஒழுக்க நடவடிக்கை மூலமாகவோ அல்லது, கட்சியின் யாப்பைக் காட்டியோ இதனைத் தடுத்து நிறுத்தி— விட முடியாது என்ற நிலையில்தான் நேரடிப் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு சஜித்தை அழைத்திருந்தார் ரணில்.

இது சஜித்தைக் கட்டுப்படுத்துவதற்காக ரணில் எடுத்த மூன்றாவது நகர்வு. அலரி மாளிகையில் வியாழக்கிழமை இரவு நடைபெற்ற இந்த நேரடிப் பேச்சுக்கள் மிகவும் சுமுகமாக இடம் பெற்றதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற இந்த பேச்சுக்களின் போது, கட்சியின் சனாதிபதி வேட்பாளர் யார் என்பது பற்றி முக்கியமாக விவாதிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. எம்பிலிப்பிட்டியவில் நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டிருந்த சஜித், அலரி மாளிகையில் இருந்து கிடைத்த அழைப்பை அடுத்து உடனடியாகவே தனது நிகழ்வை இடைநிறுத்திக்கொண்டு கொழும்பு புறப்பட்டார். இரவு 9.30 மணி அளவில் அலரி மாளிகையை வந்தடைந்த அவர், ரணிலுடன் 11.00 மணி வரையில் பேசியுள்ளார். .

ராஜித சேனாரட்னவும், ஹர்ஷ டி சில்வாவும் இந்தப் பேச்சுக்களில் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சனாதிபதி வேட்பாளரை எவ்வாறு தெரிவு செய்வது என்பது குறித்து இதன்போது விரிவாக ஆராய்ந்ததாக ஹர்ஷா தெரிவிக்கின்றார். இருவருக்குமிடையில் முரண்பாடுகள் மேலோங்கியிருக்கும் நிலைமையில் இடம்பெற்றுள்ள இந்தச் சந்திப்பு சுமூகமான நிலைமை ஒன்றை கட்சியில் ஏற்படுத்துவதற்கு எந்த அளவுக்கு உதவும் என்பதுதான் இன்றுள்ள கேள்வி. ரணில் தன்னுடைய மாலைதீவு விஜயத்தை முடித்துக்கொண்டு வரும்வரை வந்தபின்னர் இந்த நெருக்கடி மீண்டும் சூடுபிடிக்கும் என எதிர்பார்க்கலாம். ஆனால், பத்து நாட்களுக்கு முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கும், தாக்குதல்களை நிறுத்துவதற்கும் இருவரும் இணங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.தே.க. நிலைமை இவ்வாறிருக்க பொது ஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இடையிலான தேர்தல் குறித்து இதுவரையில் இணக்கப்பாடு முழுமை அடையவில்லை எனத் தெரிகிறது. சுதந்திரக் கட்சியை பொறுத்தவரையில் பொது ஜன பெரமுனவின் மொட்டு சின்னத்தில் போட்டியிடுவதற்கு அது தயாராக இல்லை என்பதுதான் முக்கிய பிரச்சினை. சுதந்திரக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் மொட்டுவில் தஞ்சமடைந்து இருக்கின்ற போதிலும் ஒரே அடியாக மொட்டு அணியுடன் இணைந்து கொள்வது சுதந்திரக் கட்சியை அழித்துவிடும் என்பதால் அவ்விடயத்தில் மைத்திரி கொஞ்சம் அவதானமாகவே இருப்பதாக தெரிகின்றது.

கட்சியை அழித்துவிட்ட பெயர் தனக்கு கிடைக்கக்கூடாது என்பதில் அவர் கவனமாக இருக்கின்றார். அதனால்தான் பொதுவான முன்னணி ஒன்றை அமைத்து அதில் போட்டியிடும் வேட்பாளருக்கு ஆதரவளிக்கத் தயார் என்பதுதான் சுதந்திரக் கட்சியின் தற்போதைய நிலை. பொது ஜன பெரமுனையும் இதற்குத் தயாராகத்தான் இருக்கிறது. சுதந்திரக் கட்சியின் சார்பில் தெரிவான உறுப்பினர்கள் பெரும்பாலும் மொட்டுவில் இணைந்துவிட்டனர். தயாசிறி போன்ற ஒரு சிலர்தான் இன்னும் மைத்திரியுடன் இருக்கின்றார்கள். சந்திரிகா குமாரதுங்கவும் சுதந்திரக் கட்சியைக் கைப்பற்ற முனைந்துகொண்டிருக்கின்றார். சுதந்திரக் கட்சி பலமாக இருந்தால்தான் மகிந்தவுடனோ, ரணிலுடனோ தன்னால் பேரம்பேச முடியும் என மைத்திரி நினைக்கின்றார். அதனால்தான் கட்சி தாவும் எம்.பி.க்கள் மீது நடவடிக்கை என தயாசிறி அறிவித்திருக்கின்றார்.

அதேவேளையில் மொட்டுவுடன் இணைந்து கூட்டணி அமைப்பது குறித்து இப்போது பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேராளர் மாநாடு செப்டம்பர் மூன்றாம் தேதி நடைபெற இருப்பதால் அதற்கு முன்னர் இந்த பிரச்சனைக்கு முடிவு காணப்பட்டுவிடும் என சுதந்திரக் கட்சித் தலைவர்கள் நம்புகின்றார்கள். பேச்சுவார்த்தைகள் இரவு — பகலாக நடைபெறுகின்றன. இரு தரப்பிலும் காணப்படும் நெருக்கடிகளுக்கு அடுத்த வாரத்துக்குள் தீர்வு கிடைத்துவிடும் என அரசியல் வட்டாரங்கள் சொல்கின்றன.

# சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் நா.க.த அரசாங்கத்தின் ஏற்பாட்டில் லண்டனில் போராட்டம்

**தாயகத்திலே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை அமைக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் பிரித்தானியாவின் ரவல்கர் சதுக்கத்தில் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான ஆகஸ்ட் 30ல் இடம்பெற்றது. போராட்டத்தில் பெரும் திரளான தமிழ் உணர்வாளர்கள் கலந்துகொண்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிவேண்டி வானதிர முழக்கமிட்டனர். போராட்டத்தில் தாயகத்திலிருந்து வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி தமிழீழ வைப்பகத்தின் நிதிமேலாளராக இருந்த பாலகிருஸ்ணன் நாடு கடந்த தமிழீழ அரசின் பெண்கள் விவகார அமைச்சர் பாலாம்பிகை நாடாளுமன்ற உறுப்பினர் யோகலிங்கம் யோகி உள்ளிட்டோர் கலந்துகொண்டு கண்டன உரைகளை ஆற்றினார்கள். நிகழ்வின் சிறப்பு அம்சமாக இறுதி யுத்தத்திலே இலங்கை அரசபடைகளிடம் வெள்ளைக்கொடியேந்தி சரணடைந்த போராளிகள் பொதுமக்களை இலங்கை இராணுவம் சுட்டுக்கொன்றதையும், காணாமல் ஆக்கியதையும் பறைசாற்றும் காட்சிகள் பல்வேறு நிகழ்வுகள் மூலம் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டன.**















# காணாமல் ஆக்கப்பட்டவர்களிற்கு நீதி வழங்க இலங்கைக்கு வெளியே பொறிமுறை வேண்டும்: 4 புலம் பெயர் அமைப்புகள் கோரிக்கை

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நீதியை வழங்குவத ற்காக இலங்கைக்கு வெளியே பொறிமுறையை அமைக்குமாறு நான்கு புலம்பெயர் அமைப்புக்கள் சர்வதேச சமுகத்திடம் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.சர்வதேச காணாமலாக்கப்பட்ட தினத்தினை முன்னிட்டு பிரித்தானிய தமிழர் பேரவை, அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், கனேடிய தமிழ் காங்கிரஸ், அமெரிக்க தமிழர் செயற்பாட்டு குழு ஆகிய நான்கு புலம்பெயர் அமைப்புக்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் 900நாட்களுக்கு அதிகமாக தமது வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காக தொடர்ச்சியாக போராடிக் கொண்டிருக்கும் தாய் மார்கள் உள்ளிட்ட உறவினர்களுக்கு நாம் பூரண ஆதரவினை வழங்குகின்றோம். அத்துடன் புலம்பெயர் நாடுகளில் தயாகத்தில் போராடும் உறவுகளுக்காக குரல்கொடுப்பவர்களுக்கும் எமது ஒத்துழைப்புக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். சர்வதேச மன்னிப்புச்சபையின் தகவல்களில் பிரகாரம் 1980ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரையில் இலங்கையில் மூவின சமூகத்தினையும் சேர்ந்த 60ஆயிரம் முதல் ஒரு இலட்சம் வரை—யிலானவர்கள் காணமலாக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 40ஆயிரம் முதல் 80ஆயிரம் பேர் வரையிலானவர்கள் தமிழர்களாக காணப்படுகின்றார்கள். காணமலாக்கப்பட்டவர்கள் பற்றி ஆராய்வதற்காக 2015ஆம் ஆண்டு இலங்கைக்குச் சென்றிருந்த ஐக்கிய நாடுகள் சபையின் குழுவானது பல்வேறு ஆராய்வு களைச் செய்திருந்தது. காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாத நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்தில் இருப்பதாகவும் அக்குழு குறிப்பிட்டிருந்தது.

மேலும் அண்மையில் இலங்கையின் 23 ஆவது இராணுவத் தளபதியாக இறுதி போரில் பங்கேற்றிருந்த சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இறுதிப்போரில் பல்வேறு கட்டளைகளை வழங்கியவர். இவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டடிலும் காணப்படுகின்றன. மிக முக்கியமாக சரணடைந்தவர்கள் காணாமலாக்கப்பட்டுள்ளார்கள். இதற்கு சவேந்திர சில்வாவின் கீழ் இயங்கிய படைப்பிரிவினர் காரணமாக இருந்துள்ளனர். மேலும் அவர் சரணடைந்தவர்கள் குறித்து பொறுப்புக்கூறவேண்டிய ஒருவராகவும் உள்ளார். அவ்வாறான நிலையில் அவரது நியமனமானது, காணமல்போன உறவினர்களின் போராட்டத்தினையும் அவர்களது கோரிக்கையும் அவமரியா தைக்குட்படுத்துவதாகும். போர் நிறைவடைந்து பத்து ஆண்டுகளாகின்ற போதும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தினை நடைமுறைப் படுத்துவற்குரிய நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்க வில்லை. 40.1தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துவற்கு கால அவகாசமும் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறான நிலையில் போரின் இறுதியில் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது, காணமலாக்கப்பட்டவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா இல்லையா என்பது குறித்து உரிய பதில்களை அரசாங்கம் அளிக்க வேண்டும். ஆனால் அதுகுறித்த முற்போக்கான செயற்பாடுகள் எவையும் முன்னெடுக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடியவில்லை. ஆகவே நீதிக்காகவும், உண்மைகளை கண்டறியவும் தொடர்ச்சியாக போராடிக் கொண்டிருக்கும் உறவுகளுக்கு பொறுப்பான பதிலளிப்பதற்காக இலங்கைக்கு வெளியே நீதிவழங்குவதற்கான பொறிமுறையொன்றை ஸ்தாபிக்குமாறு சர்வதேச சமுகத்திடம் கோருகின்றோம். தாமதமின்றி இக்கட்டமைப்பினை உருவாக்க வேண்டும் என்றும் நாம் கோருகின்றோம் என்றுள்ளது.

# காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சனையில் இந்தியா இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

## நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தல்

சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் பட்டியலை வெளியிடும்படி சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு அழுத்தம் தரவேண்டும் — நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தல்




அனைத்துலக காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை (International Day of the Disappeared) முன்னிட்டு இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்களின் நிலை என்ன? என்பது குறித்து நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் தலைமையில் சென்னையில் பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தினர். இதில் அவர் கருத்து கூறும்போது

சிங்கள அரசு போரைக் காரணம் காட்டி இலங்கையின் முப்படைகளாலும் 20000 த்திற்கும் அதிகமான தமிழர்கள் திட்டமிட்டுக் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இறுதிப்போரில் சர்வதேச போர்விதிமுறைக்கு உட்பட்டு சரணடைந்த ஆயிரக்கணக்கான தமிழர்களும் இதில் அடங்கு வார்கள். இறுதிப்போர் முடிந்து பத்தாண்டுகளாகியும் அவர்களின் நிலை வெளிப்படாமலும் கண்டறியப்படாமலும் உள்ளது.

இலங்கை அரசால் வலிந்து திட்டமிட்டுக் காணாமல் ஆக்கப்பட்டதனால் குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்கள், கணவனை இழந்த பெண்கள், தந்தையை இழந்த பிள்ளைகள், மகனை இழந்த தாய் போன்ற பாதிக்கப்பட்ட உறவுகள் தொடர்ச்சியாகத் தாய்நிலத்திலும் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் அமைதிப் பேரணியாகச் சென்று தங்கள் வேதனைகளை, உணர்வுகளைப் பதிவு செய்து, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைக் கண்டறிந்து தாருங்கள் என அறவழியில் போராடி வருகின்றனர்.

இந்த ஆண்டும் சர்வதேச காணாமல் போன நாளான இன்று தமிழீழத் தாயகத்தில் நடைபெறவிருக்கும் எமது உறவுகளின் பேரணியை வெற்றிபெறவைக்கும் வாய்ப்பாகவும் அதை வாழ்த்தவும் தாயகத் தமிழகத்தில் இருந்து நாம் தமிழர் கட்சி சார்பாக ஆதரவளித்து எங்கள் கோரிக்கைகளை ஊடகவியலாளர்கள் முன்னிலையில் எடுத்து வைக்கிறோம்.

2009 மே மாதத்தில் போரின் முடிவில் சரணடைந்தவர்களின் பட்டியலை வெளியிடுமாறு காணாமலாக்கப்பட்டோர்களின் தாய்மார்கள், இலங்கை அதிபர் மைத்ரிபால சிறிசேனாவை சந்தித்துக் கோரிக்கை வைத்தபோது, அடுத்து நடக்கவிருக்கும் பாதுகாப்பு அவைக்கூட்டத்தில் ஆணையிடுவதாக அவர்களுக்கு உறுதியளித்திருந்தார். ஆனால், இதுவரை தன்னுடைய உறுதி மொழியை நிறைவேற்றத் தவறியுள்ளார்.

இதனால் தங்களுடைய உறவு களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிவதிலுள்ள நிலையற்றத் தன்மையாலும் அவர்களுக்கு முறையாக இறுதி அஞ்சலி செலுத்த முடியாமலும் அவர்களோடு தொடர்புடைய சொத்துரிமை உள்ளிட்ட சட்ட சிக்கல்களைத் தீர்க்க முடியாமலும் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் தொடர்ந்து துன்பத்தில் உள்ளனர்.

மேலும், தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தைப் பொங்கலை முன்னிட்டு வடக்கில் உள்ள யாழ் நகரத்திற்குச் சென்றிருந்தபோது, 2016 சனவரி 15இல் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில், "போரின்முடிவில் 2009 மே மாதத்தில் இலங்கை அரசப் படைகளிடம் சரணடைந்த அனைவரும் உயிரோடில்லை" என்று சொன்னார். இந்நாள் வரை, தன்னுடைய வாய்மொழியை ஒட்டி எழும், சரணடைந்தவர்கள் கொல்லப்படுவதற்கு யார் பொறுப்பு?, அவர்கள் எப்படிக் கொல்லப்பட்டார்கள், அவர்களுடைய இறந்த உடல்கள் எங்கே? இறந்த உடல்கள் உறவினர்களிடம் ஏன் ஒப்படைக்கப்படவில்லை? சரணடைந்த பொதுமக்கள், விடுதலைப் புலிகள் எதற்காகக் கொல்லப்படவேண்டும்? உள்ளிட்ட கேள்விகளுக்கு விளக்கம் தர மறுக்கிறார்.

இந்நிலையில் 2016ஆம் ஆண்டு அக்டோபரிலும், 2017ஆம் ஆண்டு மார்ச்சிலும், 2018 ஆம் ஆண்டு மார்ச்சிலும் மனித உரிமை மன்றத்தில் "காணாமல் போனோர் அலுவலகம் அமைத்துள்ளோம், இது ஒரு சாதனை" என்று கூறியது ஏமாற்றுப் பேச்சே.

**முன்வைத்த கோரிக்கைகளில் சில:**

1. போரின் இறுதி நாட்களில் தங்களுடைய பாதுகாப்புக்கு உறுதியளித்ததை நம்பி யாருடைய படையணியின் கீழாகச் சரணடைந்தார்களோ அவர்களின் நிலை பத்தாண்டுகளாகியும் எந்தத் தகவலும் வெளிவராத நிலையில் அவரையே நாட்டின் இராணுவத் தளபதியாக்கியிருப்பது என்பது இவ்விவகாரத்தில் மிகவும் மோசமான அணுகுமுறை. இனியும் எந்தத் தகவலும் நீதியும் கிடைக்கப்போவதில்லை என்ற சூழல் உருவாகியுள்ளது.

2. எனவே அதிகாரமற்ற அரசியல் இயக்கங்களாக இருந்து நாங்கள் முன்வைக்கும் இந்தக் கோரிக்கைகளையெல்லாம் அதிகாரத்திலிருக்கும் தமிழக அரசு, இந்தியப் பேரரசு பன்னாட்டுச் சமூகத்திற்கும் இந்தியாவின் நட்பு நாடு என்று சொல்லப்படுகின்ற இலங்கைக்கும் கோரிக்கைகளாக முன்வைத்து அழுத்தம் கொடுத்துக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய தகவல்களைத் தெரிவிக்குமாறு வலியுறுத்த வேண்டும். அப்படிச் சரணடைந்தவர்கள் உயிரோடு இருந்தால் அவர்களை உரிய



உறவுகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது தான் இச்சந்திப்பின் வாயிலாக நாங்கள் முன்வைக்கும் கோரிக்கை.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உரிய நீதி கிடைப்பதை உறுதி செய்வது தமிழக அரசு மற்றும் இந்திய அரசு மற்றும் பன்னாட்டுச் சமூகத்தின் கடமையாகும். இவ்வாறு சீமான் தெரிவித்தார்.

## தமிழ்நாட்டில் இருந்து முதல் பெண் ஆளுநராக தமிழிசை சவுந்தரராஜன் நியமனம்!



பாஜக தலைவரான தமிழிசை சவுந்தரராஜன் தெலங்கானா மாநில ஆளுநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதன் மூலம் தமிழ்நாட்டில் இருந்து தேர்வு செய்யப்படும் முதல் பெண் ஆளுநர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். 2014ஆம் ஆண்டு முதல் தமிழக பாஜகவின் தலைவராக இருப்பவர் தமிழிசை சவுந்தரராஜன். காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரான குமரி அனந்தனின் மகளான தமிழிசை சவுந்தரராஜன், பா.ஜ.க.வின் பொதுச் செயலாளர், துணைத் தலைவர், தேசிய செயலாளர் போன்ற பொறுப்புகளையும் வகித்தவர். 2006 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் நடந்த சட்டப்பேரவைத் தேர்தல், 2009 மற்றும் இந்த ஆண்டில் நடைபெற்ற மக்களவைத் தேர்தல்களில் போட்டியிட்டுத் தோல்வியை தழுவினார். தமிழிசை சவுந்தரராஜன் ஆளுநராகப் பதவியேற்க உள்ளதால் அடுத்ததாக தமிழக பாஜகவுக்கு தலைமையேற்கப் போவது யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. தெலங்கானா மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள தமிழிசை சவுந்தரராஜனை லண்டனில் இருந்து தொலைபேசியில் தொடர்புகொண்ட முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அவருக்கு வாழ்த்து தெரிவித்தார்.

# காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் சிறீலங்காவை பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்துக!

## ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு ஐ.நாவுக்குக் கோரிக்கை

காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு சென்னையில் உள்ள ஐ.நா யுனிசெப் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஈழத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்ட ஈழத் தமிழருக்கு நீதிக்கோரி ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சார்பாக ஐநா. பொதுச் செயலருக்கும் ஐநா மனித உரிமை ஆணையருக்கும் கோரிக்கை மனு கையளிக்கப் பட்டது.

இந்த கோரிக்கை மனுவை வழங்கிய குழுவில் தமிழ்த்தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் தியாகு, தடயவியல் நிபுணரும் மருத்துவருமான பேராசிரியர் சேவியர். பேராசிரியர் பச்சமுத்து, திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமை நிலையச் செயலாளர் தபசிக்குமரன், தமிழ்த்தேச மக்கள் முன்னணியைச் சேர்ந்த கண்ணன், இளந்தமிழகம் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் செந்தில் ஆகியோர் பங்குபெற்றனர். யுனிசெப் அலுவலக அதிகாரியிடம் சிறீலங்கா அரச படையால் காணாமலாக்கப்பட்ட இருபதாயிரத்திற்கும் மேலான தமிழர்களின் நிலை என்ன என்பது போர் முடிந்து பத்தாண்டுகள் ஆகியும் தெரியவில்லை. காணாமலாக்கப்பட்டவர்கள் நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தில் இருக்கிறது. போர் முடிந்த நிலையில் சரணடைந்தவர்களும் குழந்தைகளும் கூட காணாமலாக்கப்பட்டுள்ளனர்.




இலங்கை அரசாங்கம் சர்வதேச விதிகளின் கீழான கடமைகளையும் சரி தானே முன்வந்து இணைஉபயம்(co-sponsor) செய்த, முற்றாக நடைமுறைப்படுத்துவதாக ஐ.நா. விடம் உறுதியளித்த ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் 30/1, 34/1 மற்றும் 40/L.1 தீர்மானங்களின் கீழான கடமைகளையும் சரி நிறைவேற்றத் தவறிவிட்டது. இவைமட்டுமின்றி, சிறீலங்கா அரசாங்கம் ஏராளமான உறுதிமொழிகளை அளித்திருந்தும் அரசப்படையாள் ஒருவரைக்கூட நீதியின் முன்பு நிறுத்தவில்லை. நேர்மாறாக, சிறீலங்காவில் போர் நடந்த போது பத்தாயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதிலும் காணாமற் செய்யப்படுவதிலும் வகித்த பங்கிற்காகப் போர்க்குற்றவாளி என்று பல ஐநா அறிக்கைகளும் குறிப்பிட்டுச் சொல்லும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை சிறீலங்கா இராணுவத்தின் புதிய படைத் தலைவராக அமர்த்தியிருக்கின்றது சிறிலங்கா அரசு. 2009 மே மாதம் மேஜர் ஜெனரல் சில்வாவின் 58ஆம் படைப் பிரிவின் கையில் சிறிலங்கா இராணுவம் என்னவெல்லாம் செய்தது என்பதை ஐநா அறிக்கைகள் விவரமாகக் கூறியுள்ளன. தமிழினவழிப்பை நிகழ்த்துவதில் முதன்மைப் பங்கு வகித்தவர்களில் ஒருவர் மேஜர் ஜெனரல் சில்வா. 2011ஆம் ஆண்டு நியூ யார்க்கில் ஒரு போர்க்குற்ற வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர். அரசதந்திர விலக்குப் பெற்றவர் என்ற அடிப்படையில் மட்டுமே இவ்வழக்கு தள்ளுபடி ஆயிற்று. இந்தக் குற்றச்சாட்டுகளால்தான் ஐநா அமைதிக் காப்புக் குழு ஒன்றிலிருந்தும் சில்வா அகற்றப்பட்டார். சில்வாவை படைத் தலைவராக அமர்த்தியிருப்பது குறித்து ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஆணையர் மிசேல் பச்செலட் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளார்.

உள்நாட்டு வழிமுறையோ பன்னாட்டு வழிமுறையோ எதற்கும் இடமில்லை என்ற நிலையில், காணாமல் போனவர்களின் தாய்மார்களும் மனைவிமார்களும் கிளிநொச்சியிலும் பிற மையங்களிலும் மாதக் கணக்கில் தொடர்ந்து அறப்போராட்டம் நடத்தி வருகிறார்கள். எங்கள் குடும்பத்தினரை விடுதலை செய்க! அல்லது அவர்களுக்கு என்ன நேரிட்டது என்ற உண்மையை அறிய நம்பகமான புலனாய்வு செய்க! என்பதே அவர்கள் கோரிக்கை. அமைதியான முறையில் நடைபெறும் இந்தப் போராட்டங்கள் அரசின் வன்முறைக்கு இலக்காகியுள்ளன. மேலும் இப்போராட்டங்களுக்கு தலைமை தாங்கக் கூடிய முன்னணித் தலைவர்கள் சிறிலங்கா அரசப் படைகளின் அச்சுறுத்தலுக்கும் தாக்குதலுக்கு ஆளாகி வருகின்றனர். காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கோரிப் போராடுவோர் தாமும் காணாமலாக்கப்பட்டு விடுவோமோ என்ற அச்சத்தில் இருக்கின்றனர்.

கடந்த ஆண்டு இறுதியில் இலங்கையின் வடக்கு கிழக்கில் உள்ள தமிழர் தாயகப் பகுதிக்கு நேரில் சென்று வந்த மருத்துவர் சேவியர் அவர்கள் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் துயரத்தை எடுத்துச் சொன்னார். "ஒரு தாய் தனது முதல் இரண்டு பிள்ளைகளைப் போரில் இழந்துள்ளார். அது பற்றி குறிப்பிடும்போது அவர் கலங்கவில்லை. ஆனால், தனது மூன்றாவது பிள்ளைத் தன் கண் முன்னே இராணுவத்திடம் சரணடைந்து காணாமலாக்கப்பட்டோர் பட்டியலில் இருப்பவர் என்று சொல்லும் போதே கடகடவென கண்ணீர் விட்டு அழுதுவிட்டார்." என்று ஓர் எளிய எடுத்துக்காட்டின் மூலம் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் துயரத்தை எடுத்துச் சொன்னார்.



**வழங்கப்பட்ட கோரிக்கைகள்:**

(1) இனியும் காலந்தாழ்த்தாமல் அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்திற்கோ அல்லது சிறிலங்கா குறித்து பன்னாட்டுக் குற்றவியல் தீர்ப்பாயம் அமைத்து அதன் கீழோ சிறீலங்காவில் வலுகட்டாயமாக காணாமலாக்கப்பட்டோர் குறித்த புலனாய்வை நடத்துமாறு வலுக்கட்டாயக் காணாமலாக்குதல் தொடர்பான குழுவில் உள்ள அரசுகள் ஐ.நா. மனித உரிமைப் பேரவையை வலியுறுத்த வேண்டும்.

(2) "வலுக்கட்டாயக் காணாமலாக்குதலால் இல்லாமற்போதல்" என்ற சிறப்புச் சட்டத் தகுநிலை ஒன்றைத் தோற்றுவிக்கும் படி சர்வதேச சமுதாயம் சிறீலங்காவுக்கு அழுத்தம் தருமாறு வலியுறுத்துகிறோம்.

(3) சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிப்படையினரின் பட்டியலை வெளியிடும்படி சர்வதேச சமுதாயம் சிறீலங்காவுக்கு அழுத்தம் தருமாறு வலியுறுத்துகிறோம்.

(4) சிறைக் காவல் மையங்கள் அனைத்தையும் பன்னாட்டு நோக்கர்களும் சர்வதேச சமுதாய உறுப்பினர்களும் தடையின்றிப் பார்வையிட சிறீலங்கா அனுமதிக்கக் கோருகிறோம்.

(5) வலுக்கட்டாயக் காணாமலாக்குதல் தொடர்பான குழுவிடம் பாதிப்புற்றவர்கள் நேராக முறையீடுகள் தாக்கல் செய்ய அனுமதிக்கும் வகையில் வலுக்கட்டாயக் காணாமலாக்குதல் ஒப்பந்தத்தின் 31ஆம் உறுப்பையொட்டிப் பிரகடனம் செய்யும்படி சர்வதேச சமுதாயம் சிறிலங்காவுக்கு அழுத்தம் தருமாறு வலியுறுத்துகிறோம்.

(6) காணாமல் போனவர்கள் அலுவலகத்தில் பன்னாட்டு வல்லுநர்களைச் சேர்த்துக் கொள்ளும் படிசர்வதேச சமுதாயம் சிறீலங்காவுக்கு அழுத்தம் தருமாறு வலியுறுத்துகிறோம்.

(7) அரசாங்கத்தால் சிறை வைக்கப் பட்டவர்களில் பெரும்பாலார் "அநேகமாக இறந்து விட்டார்கள்" என்று திரு ரணில் விக்கிரமசிங்கா 2016 சனவரி மாதம் கூறியதைப் புலனாய்வு செய்யும்படி சர்வதேச சமுதாயம் வலுக்கட்டாயக் காணாமலாக்குதல் பற்றிய குழுவைக் கேட்குமாறு வலியுறுத்துகிறோம்.

(8) வலுக்கட்டாயக் காணாமலடித்தல் பற்றிய ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டுள்ள அரசுகள் உறுப்பு 32இல் வழிவகை செய்யப்பட்டுள்ள கடப்பாடுகளை சிறீலங்கா நிறைவேற்றத் தவறி—யிருப்பதைக் கருதிப் பார்க்கும்படி சர்வதேச சமுதாயம் வலுக்கட்டாயக் காணாமலடித்தல் பற்றிய குழுவைக் கேட்குமாறு வலியுறுத்துகிறோம்.

யுனிசெப் அலுவலக அதிகாரி விண்ணப்ப மடல்களைப் பெற்றுக் கொண்டு ஐ.நா.வின் இந்திய அலுவலகத்திற்கு முன் அனுப்புவதாக கூறினார்.





# பற்றி எரிகிறது உலகத்தின் நுரையீரல்

இந்தாண்டு ஜூன்— ஜூலை மாதங்கள் அமேசன் காடுகள் ஒரு காரணத்திற்காக உலகத்தின் பேசுபொருளாகி இருந்தன, இந்த மாதம் வேறுஒரு காரணத்திற்காக பேசு பொருளாகியுள்ளது. கடந்த ஜூலை மாதம் மட்டும் அமேசானில், சுமார் 1,345 சதுர கிலோமீற்றர் அளவிற்கு மரங்கள் வெட்டப்பட்டு காடுகள் அழிக்கப்பட்டன, அளவில் இது டோக்கியோ நகரத்தை விட இரண்டு மடங்கு பெரியது. கிட்டத்தட்ட ஒரு நிமிடத்திற்கு இரண்டு முதல் மூன்று கால்பந்தாட்ட மைதானம் அளவிற்கு காடுகள் அழிக்கப்பட்டன. அமெரிக்க நாட்டின் நிலப்பரப்பில் பாதியளவு இருக்கும் அமேசன் காடுகளின் பரப்பளவு. புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசும், சட்டத்திற்கு புறம்பாக வெட்டப்படும் மரங்களை கையகப்படுத்துவது கிடையாது, சென்ற ஆண்டு சுமார் 8,83,000 கன அடி மரங்கள் கடத்தல்காரர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டது, இந்த ஆண்டு அந்த எண்ணிக்கை வெறும் 1,410கன அடிதான். காடுகள் அழிக்கப்படுவதை தடுக்க அரசு நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதை உறுதிசெய்யமுடிகிறது.

இப்போது, கடந்த இரண்டு வாரங்களாக அமேசான் காடுகள் பற்றியெரிகின்றன, கடந்த 2018ஆம் ஆண்டு இதே மாதத்தில் ஏற்பட்ட "காட்டுத் தீயை" விட சுமார் 86% இந்த ஆண்டு அதிகரித்துள்ளது. பிரேசில் நாட்டின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (INPE) வெளியிட்டுள்ள தரவுகளின்படி இந்த ஆண்டு மட்டும் இதுவரை 72,843 இடங்களில் "காட்டு தீ" ஏற்பட்டுள்ளது, அதுவும் கடந்தவாரம் மட்டும் 9,000 தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளன. பல்வேறு இடங்களில் ஏற்பட்டுள்ள இந்த தீ எந்த அளவிற்கு பரவியுள்ளது என்பதை கணிக்கமுடியவில்லை, ஆனால் நாசா வெளியிட்டுள்ள செயற்கைக்கோள் படங்களின் மூலம் புகையை விண்வெளியிலிருந்து காணமுடிவதை உறுதிசெய்யமுடிகிறது. அமேசான் காடுகளிலிருந்து சுமார் 2,500 கி.மீ. தொலைவிலுள்ள சாவ்பாலோ நகரம் கரும்புகை சூழ்ந்துள்ளது. கோப்பர்நிக்கஸ் செயற்கைகோள் புகைப்படம், கரும்புகை வடக்கு முதல் தெற்கு வரை கத்தி கிழித்துக்கொண்டு செல்வது போல் காட்டுகிறது.

இதுவரை இந்த அளவிற்கு அதிகளவில் காட்டுத்தீ ஏற்பட்டதற்கான தரவுகள் கிடையாது என்கிறார் சூழலியலாளர் "தாமஸ் லவ்ஜாய்". கடந்த சிலமாதங்களாக நிகழ்ந்துவரும் காடழிப்பு இதற்கு முக்கியமான காரணம் என்பதை மறுப்பதற்கில்லை என்கிறார் லவ்ஜாய்.

அமேசானில் ஏற்பட்டு வரும் சீரழிவுகள் குறித்து சூழலியல் செயற்பாட்டாளர்கள் எச்சரிக்கை செய்துவருகின்றனர், அதுவும் கடந்த ஆண்டு பிரேசில் நாட்டின் அதிபராக போல் சோனரோ பதவியேற்றபிறகு இந்த சீரழிவு அதிகமாகியுள்ளதாக தெரிவிக் கிறார்கள். வலதுசாரி சிந்தனை கொண்ட அவர், அமேசன் காடுகளில் உள்ள கனிமங்கள் முழுமையாக பயன்படுத்தப்படும், முதலீட்டிற்கு அமேசன் காடுகள் திறந்துவிடப்படும் என்று தேர்தல் பிரச்சாரத்தில் அறிவித்து, தேர்தலில் வெற்றிபெற்றுள்ளார், பிறகென்ன கேட்கவா வேண்டும்?

இந்த மாத துவக்கத்தில் பிரேசில் நாட்டின் விண்வெளிஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட தரவுகளின்படி, கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்ற காடழிப்பை விட இந்தக் கோடையில் நடைபெற்ற காடழிப்பு அதிகமாகவுள்ளதை அறிந்துகொள்ளமுடிகிறது. பொதுவாக "காட்டுத்தீ" கோடைகாலங்களில் ஏற்படுவதற்கு முக்கியமான காரணம், ஈரப்பதம் இல்லாததுதான், ஆனால் இந்தாண்டு ஈரப்பதம் இருந்தும் தீ வருவதற்கு காரணம் காடழிப்பாகத்தான் இருக்கமுடியும் என்கிறார் அமேசான் காடுகள் பற்றி ஆய்வுகளை மேற்கொண்டுவரும் சூழலியலாளர் அட்ரியானே முயல்பெர்ட்". மரங்களை வெட்டி, காடுகளை அழிப்பது மாடுகளை வளர்க்கும் பெரிய பண்ணைகள் அமைப்பதற்கு உதவிபுரிவது மட்டுமல்ல பல்வேறு கனிமங்களை எடுப்பதற்கும் இலகுவாகிறது. காடழிப்பின் மூலம் மேலும் இந்நிலம் இன்னும் அதிகமாக வறண்டுபோகும், அது காட்டுத்தீயை மேற்கொண்டு அதிகரித்து ஒருமோசமான சுழற்சியில் போய் நிறுத்திவிடும் என்கிறார் லவ்ஜாய்.




அமேசன் காடுகளில் ஏற்படும் மழைபொழிவிற்கு காரணம் அக்காடுகளே, காடுகளின் அளவு குறைய குறைய மழைப்பொழிவு குறைந்து, அதன்மூலம் மேலும் காடுகள் அழிந்து, திரும்பமீட்டெடுக்க முடியாத சவன்னா காடுகள் போலாகிவிடும் என்று கவலைகொள்கின்றனர் சூழல்செயல்பாட்டாளர்கள். மீட்டெடுக்க முடியாத கடைசி புள்ளியை (tipping points) நோக்கி அமேசன் காடுகள்" சென்றுகொண்டிருக்கிறது, அங்கே ஏற்படும் மழைபொழிவிற்கு அமேசன் காடுகளே காரணமாகவுள்ளதால், ஒட்டு மொத்த காடுகளையும் "ஒரே அமைப்பாக" கையாண்டால்தான் அவற்றை காப்பாற்றமுடியும்.

காடழிப்பும், மோசமான மேலாண்மையும் தொடர்ந்தால் இதைப்போன்ற காட்டுத்தீ மேலும் அதிகமாகும் அதன் தாக்கம் உலகம் முழுவதையும் பாதிக்கும். காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள அமேசன் காடுகளை காப்பது முக்கியத்துவம் பெறுகிறது. காடுகள் அழிக்கப்படுவதும் அல்லது தீக்கிரையாவதும் மூலம் அந்த காடுகள் தேக்கிவைத்துள்ள கார்பன் வெளியேறுவது மட்டுமல்ல, உலகம் வெளியிடும் கார்பனை உள்வாங்கும் சக்தியும் குறைந்து, காலநிலை மாற்றத்தை துரிதப்படுத்தும். எந்தவொரு காடழிப்பும், பல்லுயிரிய இழப்பிலும், அந்த காடுகளை நம்பி வாழும் பூர்வகுடிகளின் வாழ்வாதாரங்கள் அழிப்புடன் நிற்பதில்லை, அக்காடுகள் இதுவரை உள்வாங்கிவைத்திருந்த கார்பன் வெளியேறுவது இன்றைய காலகட்டத்தில் மிகப்பெரிய பிரச்சனையாக உருவெடுக்கிறது. இந்த ஆகஸ்ட் மதம் வெளியேறியுள்ள கார்பனின் அளவு எவ்வளவு என்பது சில நாட்களில் தெரிந்துவிடும், ஆனால் ஐபிசிசி இந்த மாத துவக்கத்தில் வெளியிட்ட அறிக்கை, நாம் வெளியிடும் கார்பனை உள்வாங்க இப்பூமியில் போதிய காடுகள் இல்லை என்று தெரிவித்துள்ளது. காட்டுத்தீ ஏற்படுவதற்கு பல காரணிகள் உள்ளன, சில சமயங்களில் அதிகவெப்பம், மின்னல் போன்ற இயற்கை காரணிகளால் தீ பற்ற ஆரம்பித்தாலும் பெரும்பாலும் அவை மனித தவறுகளால் பற்ற ஆரம்பிக்கின்றன. தீ பற்றி பரவுவதற்கு மூன்று முக்கியமான விடயங்கள் தேவை, அவை எரிபொருள், ஒக்சிசன், வெப்பம். இந்த மூன்றும் இயற்கையாக அமேசன் காடுகளில் கிடைத்துவிடும்படியால் தீ வேகமாக பரவ ஆரம்பித்துவிடுகிறது. அதுவும் இப்போது ஏற்பட்டுள்ள காட்டுத்தீக்கு முக்கியமான காரணமாக பார்க்கப்படுவது, பிரேசில் நாட்டில் "பாரா" மாகாணத்தில் விவசாயிகள் ஆகஸ்ட் இரண்டாவது வாரத்தில், "டே ஆப் பையர்" என்று அறிவித்து காடுகளை தீவைத்து அழிக்க ஆரம்பித்ததுதான் துவக்கப்புள்ளி. இப்படி அழிக்கப்படும் காடுகளில் பெரிய பெரிய பண்ணைகளை அமைத்து கால்நடைகளை வளர்த்து, விவசாயமும் செய்யத்துவங்குகிறார்கள். பெரிய அணைகளை அமைத்து "நீர்மின்சாரம்" தயாரிக்கப்போவதாக பிரேசில் அரசாங்கம் அறிவித்துள்ளது. அமேசன் காடுகளில் சுமார் 10 லட்சம் பூர்வகுடி மக்கள் வாழ்ந்துவருகிறார்கள், அவர்களுக்கு இந்த காடுகள் தான் எல்லாமும். சுமார் 30 லட்சம் உயிரினங்களின் வாழ்விடமாக உள்ளது இக்காடுகள். சென்றாண்டு ipbes அறிக்கையின் படி, இன்னும் சில ஆண்டுகளில் சுமார் 10 லட்சம் உயிரினங்கள் அழிந்துபோய்விடும் என்று தெரிவித்த ஆய்வை, அமேசனில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ உறுதிப்படுத்துகிறது.

அமேசன் காடுகளில் பற்றியெரியும் தீயை கட்டுப்படுத்த கவனம் செலுத்தவேண்டிய பிரேசில் நாட்டின் அதிபர், "தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அமேசன் காடுகளில் தீயை பற்றவைக்கிறார்கள்" என்ற ஆதாரமற்ற மோசமான குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது உலகெங்கிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஒருபிரச்சனை இருப்பதை ஒத்துக்கொண்டால் அதற்கான தீர்வுகளை நோக்கி பயணிக்கமுடியும், அப்படி பிரச்சனை இருப்பதுபோல் அதிபர் காட்டிக்கொள்ளவில்லை.

சர்வதேச அளவில் பல அரசுகள் குரல் கொடுத்ததும், டி காப்ரியோ உள்ளிட்ட ஹாலிவுட் நடிகர்கள், வெளிப்படையாக செயல்படாமல் இருப்பதற்கு கண்டனம் தெரிவித்ததால் இப்போது அதிபர் உலக நாடுகளிடம் அமேசனை காப்பாற்றுவதற்கு உதவி கோரி இருக்கிறார். இப்பூமிக்கு தேவையான ஒக்சிசன் அளவில் 20% தயாரிக்கும் அமேசன் காடுகள் இவ்வுலகத்தின் நுரையீரல், அதற்கு இழைக்கப்படும் தீங்கு இப்பூமிக்கு எதிரான குற்றம் மட்டுமல்ல, ஒட்டுமொத்த மானுடத்திற்கும் எதிரான குற்றமும் கூட. அமேசன் காடுகள் அமேசன் காடுகளுக்கானவை அல்ல, உலகத்திற் கானவை, அவற்றை காப்பாற்ற உலக சமூகம் முன்வரவேண்டும், வருமா?